Tamil Heritage Foundation

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts


visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை
தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை



சுப்ரதீபக் கவிராயரின்

# கூளப்ப நாயக்கன் காதல்

விளக்கவுரை

கவிஞர் கண்ணதாசன்

குடும்ப நூலகம்
16, ஹென்ஸ்மென் ரோடு,
தியாகராயநகர்
சென்னை–600017

முதற்பதிப்பு
மே, 1978

உரிமை ஆசிரியருக்கு

விலை ரூ 1-50

அச்சிட்டோர்: நாதன் & கம்பெனி, சென்னை-600 042.

# முன்னுரை

மடல், தூது, பிரபந்தம் போன்ற இலக்கியங்களில் இதுவும் ஒருவகை.

17-ம் நூற்றுண்டின் இறுதியில் திண்டுக்கல் வட்டம் நிலக்கோட்டையை ஆண்டவன், நாகம கூளப்ப நாயக்கன். இவன் மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களின் ஒரு வம்சாவளி. மதுரையை ஆண்ட திருமலே நாயக்கரின் மைத்துனன் இவன் என்றும் கூறப்படுகிறது.

இவன் மீது, மதுரைக்கு அருகில் உள்ள திருமங்கலம் பகுதியில் பொற்கொல்லர் மரபில் பிறந்த சுப்ரதீபக் கவிராயர் பாடியதே இந்நூல். இந்த சுப்ரதீபக் கவிராயரே, 'விறலி விடு தூதின்' ஆசிரியரும் ஆவார்.

உவமை நயத்தில் இவருக்கு ஈடாக கம்பனே மட்டுமே சொல்ல முடியும்.

ஓரளவுபடித்தவர்களிடம் மட்டும்தான் இது வரை இந்நூல் பரவியிருந்தது. இப்போதுதான் பரவலாக இது மற்றவர் கைக்கு வருகிறது.

முதன் முதலில் இந்நூலே 'சக்தி காரியாலயத்'திற்காக 1943-ல் பதிப்பித்தவர், பேராசிரியர் மு. அருணுசலனுர் அவர்கள்.

என்னுடைய மதிப்பிற்கும் மரியாதைக்கும் -ரிய அவர், அந்தப் பதிப்பில் அரும்பதங்களுக்கு மட்டுமே உரை எழுதியிருக்கிருர், ஆனுல் தெளிவான ஒரு முன்னுரை எழுதியிருக்கிருர்.



இந் நூலே உரைநடையில் தர வேண்டும் என்ற ஆசை,எனக்கு நீண்ட நாட்களாக உண்டு.

உரைநடையையும், கவிதையையும் ஒப்பிட்டுப் பார்க்க இது உதவும்.

'விறலி விடு தூதி'லும் 'கூளப்ப நாயக்கன் காதலி'லும் முப்பத்தைந்து ஆண்டு காலமாக எனக்கு ஈடுபாடு உண்டு.

'திரை ஒலி'பத்திரிகையில் வேலே பார்க்கும் போதே இதில் பல பகுதிகளே மனப்பாடம் செய்திருக்கிறேன். எனது கவிதை வளத்துக்கு இதுவும் ஒரு வழிகாட்டி.

இந் நூலே, எனது குழந்தைகளின் குடும்ப நூலகம் வெளியிடுகிறது.

இதையும் நான் சொல்லச் சொல்ல எழுதியவன், என் தம்பி இராம கண்ணப்பன்.

சென்னே
4-5-78

அன்பன்
**கண்ணதாசன்**

# கூளப்ப நாயக்கன் காதல்

## குரு வணக்கம்

மகத்தான முனிவர்களால் போற்றப்படும் திருவிளையாடற் புராணம் செய்த எனது குரு, பரஞ்சோதி முனிவரை நான் மறக்க மாட்டேன். 5

## அவை யடக்கம்

புகழ்மிக்க ஒரு நாயகன் மீது ஒரு பெண் காதல் கொண்டாள். மகத்தான கவிச்சிங்கங்கள் இருக்கும் போது,அதை நான் பாடத் துணிந்தது தானம் அறியாதவன், தவயோகம் தெரியாதவன், தத்துவ ஞானமில்லா ஒருவன், மாபெரிய ஞானிகளுக்கு அறிவு சொல்வது போல் காட்சியளிக்கும். 6-7

அவ்வப்பொழுது அமுதூட்டி குழந்தைகளின் பேச்சைத் திருத்தி வளர்க்கும் பெற்றோர், கிளி குழறுகின்ற மொழியைக் கேட்டு மகிழ்வது போல்,திருவளர் மன்னன் நாகம நாயக்கன் என் கவிதையில் என்ன குற்றம் கண்டாலும் அதை இன்பமாகக் கொள்வான். 8-9



## தசாங்கம்

### மலை

அவனது மலை, பன்றி மலை. வேட்டுவர்கள் தேன் கொடுக்க, அவர்களுக்குத் தேவர்கள் அமுதளிப்பதற்காக வானைத் தொட்டுக் கொண்டிருக்கிறது அந்த மலை. 10

### ஆறு

கங்கையும் யமுனையும் கலந்தது போல், பொன்னி யாற்றின் வண்ணங் கலந்த குடவனாறே அவனுடைய நதி. 11

### நாடு

இளம் முலைகளைக் கொண்ட பெண்கள் ஓடைகளில் குளிக்கிறார்கள். அவர்கள் முகத்திலே உள்ள மஞ்சள் நீரிலே கலக்கிறது. அந்த நீர், பண்ணைகளில் ஒடிப் பயிர் வளர்க்கிறது. அத்தகைய பாண்டி நாடே அவனுடைய நாடு. 12

### ஊர்

அந்த மன்னனின் கொடி, அவனது ஊர் முழுக்க வானளாவப் பறக்கிறது. வானிலே சென்று, வானத்துச் சந்திரனிலுள்ள களங்கத்தைத் துடைப்பது போல் அந்தக் கொடி பறக்கிறது. 13

### மாலை

அவனுடைய மாலை, முல்லை மாலை. கட்டான பூங்குழற் கன்னியர், அவனைக் கட்டித் தழுவும்போது, அவர்களது முலைகள் அந்த மாலையில் பாய்கின்றன. அந்த மாலைகளோடு அவன் மார்பில் முத்து மாலையும் விளையாடுகிறது. 14

## புரவி

உவகையோடு போர்க்களத்தில் புகுந்து வெற்றிகளோடு திரும்பி விரைந்து வரும் அற்புதப் புரவிகளை உடையவன். 15

## யானை

போரில் புகுந்து பொருதி, பிளிறி, எதிரியின் கொடியைப் பூமியில் போட்டு மிதித்துத் திரும்பி வரும் யானைகளை உடையவன் அவன். 16

## குடை

வானத்துப் பிறைச் சந்திரனை வெல்லுவதற்கு, பூமியிலே முளைத்தெழுந்த மற்ெறாரு பிறைச் சந்திரன் போல், வெண்கொற்றக் குடையுடையவன் அவன். 17

## முரசு

கடல் குமுறுவது போல்,மேகம் இடி இடிப்பது போல் எதிரிகளின் காதைக் குடையும் ஓசையுடையது, அவனுடைய முரசு. 18

## ஆணை

அஞ்சுவோர்க்கு அவன் வாக்கு அருமருந்து. ஆனால் மிஞ்சிப் போகும் சிற்றரசர்களை மார்பைக் குடைந்து அவர்களது வீறுப்பை அடக்கும் அம்பு அது. 19

## பிற சிறப்புக்கள்

அழகான நிலம். அவனே மன்மத குமாரன். மன்மத குமாரனுக்குப் பட்டாபிஷேகம் செய்து கொள்வது போல் செய்து கொண்டவன் அவன். 20



சொக்கநாதர் - மீனாட்சி அருளால் திக்விஜயம் செய்கின்ற செங்கோலான் அவன். 21

அவன் பல்லக்கில் ஏறும் முன்னரே, அவன் படை போய் எதிரிகளை வெற்றி கண்டு வந்து விடும். 22

'அவன் கோட்டை என்ன வெறும் கற்கோட்டை தானே' என்று எவனாவது சொன்னால், 'இல்லையடா,இது பொற்கோட்டை' என்று காட்டிவிடும் புகழ் பெற்ற திலக்கோட்டைக்குச் சொந்தக்காரன். 23

சின்னம கூளப்ப நாயக்கன் மகன், எங்கள் சிங்கம் நாகம கூளப்ப நாயக்கன். 24

சரஸ்வதியும் புகழும் வல்லக்காவார் என்ற வம்சத்தைச் சேர்ந்தவன், எங்கள் நாகம கூளப்பன். 25

பொன் அங்கே மின்னும். வஜ்ரப் பொடி அங்கே திகழும். முன் பக்கம் பொற் கதவு; பின் பக்கம் முத்துக்கள்; அவனது வாசல் அப்படி இருக்கும். 26

ஒட்டகத்தில் டமார ஒலி. மாளிகையிலே பேரிகை ஒலி. எதிரே குதிரையின் கனைப்பு. அப்படிப்பட்ட வாசல் அவனது வாசல். 27

அது சிங்கள ராஜாக்கள் கப்பம் கட்டும் வாசல் யானைக் குட்டிகள் விளையாடும் வாசல். சினக்காரர்கள் காணிக்கை கொண்டு வரும் வாசல். 28

அந்த வாசலில் ஒரு பக்கம் ஆடை வழங்குவார்கள். ஒரு பக்கம் அன்னம் வழங்குவார்கள். யாசகம் வாங்குவோர்க்குப் பொன் வழங்குவார்கள். அவனே மனுநீதி தவறாமல், நீதி வழங்குவான் 29

அழகிய பெண்கள், மீன்விழி மங்கையர் அங்கே ஆடுவார்கள். மன்மதனுடைய செங்கோல் நடனமாடும். மகாலட்சுமி கூத்தாடுவாள். 30

வேதங்கள் பொய்யாகலாம். மேகம் மழை பெய்யாமற் போகலாம். சூரியனும், சந்திரனும் வராமலே போய்விடலாம். ஆனால் நாகம நாயக்கன் சொன்ன வார்த்தை பொய்யாகாது. 31

கற்பக விருக்ஷத்திற்கும், மேகத்திற்கும் நன்கொடை கொடுக்கும் கைகள் அவனுடைய கைகள். 32

அவன் அழகில் மன்மதன்; திருமலை நாயக்கரின் மைத்துனன். 33

## கொலுவிருத்தல்

நீதிநெறி செழித்தோங்க அவன் நிலக்கோட்டையை ஆண்ட அந்நாளில் வைகையில் நீராடி, நாராயணனை வணங்கி, பிரசாதம் சாப்பிட்டு, பேரறிஞர்கள் நண்பர்களோடு இன்பரஸம் அருந்தி, சந்தனம், கஸ்தூரி, ஜவ்வாது, கதம்பம் பூசி, அழகான முத்துவடம் சூடும் தலைப்பாகை கட்டி, மாணிக்கம், பச்சை, வைரம், வைடூரியம் இவற்றால் செய்த நகைகள் அணிந்து, ஆஸ்தான மண்டபத்தில் சங்கீதம் கேட்டபடி, நாடே புகழக் கொலுவிருந்தான் தேவேந்திரன் போன்ற நாகம கூளேந்திரன் 34-39

## வேட்டைக்குச் செல்லுதல்

அவனுக்குத் திடீரென்று வேட்டைக்குச் செல்ல வேண்டும் என்று ஆசை வந்தது. கட்டியம் கூறுவோரை அழைத்து வேட்டைக்காரர்களுக்கும், மதுரைச் சேனாதிபதிகளுக்கும் சொல்லச் சொன்னான்.



பிறகு அத்தாணி மண்டபத்தில் இருந்து வெளியேறி தங்க வண்ணத்தில் ஜொலிக்கின்ற நிஜார் போட்டுச் கொண்டான். துப்பட்டா கட்டிக் கொண்டான். வஜ்ரத்திறைவான கவசம் போட்டுக் கொண்டான். கோளிலே அம்பறாத்தூணி கட்டிக்கொண்டான். வாள் செருகும் இடைப்பட்டையை(பெல்ட்)க் கட்டிக் கொண்டான். அழகான மாணிக்க மோதிரத்தை அணிந்து கொண்டான். தங்கமயமான தோல் செருப்பைக் காலில் போட்டுக் கொண்டான். உறையை விட்டு வெளியே வந்தால் எதிரியின் மார்பைப் பதம் பார்க்கும் கட்டியைக் கையில் பிடித்தான். பன்றி, புலி, யானையின் ஆணவத்தை அடக்க, சிங்கம் குகையை விட்டு வெளியே வந்ததுபோல் அவன் அரண்மனைக்குள்ளிருந்து கோட்டை வாசலுக்கு வந்தான். 40-47

## பரிவாரங்கள்

பரிவாரங்களும் புறப்பட்டன. கொற்றக் குடையேந்திச் சிலர்; கொம்பு ஊதியபடி சிலர்; பேரிகைமுழங்கிச் சிலர்; வாயு வேகமும் இந்தக் குதிரை வேகத்தில் கால் வேகம் என்னும்படி குதிரைகளின் மேல் வீரர்கள் அமர்ந்திருந்தார்கள். மற்றும் சில பெருந்தனக்காரர்கள் வாளேந்திக் குதிரைகளின்மேல் வந்தார்கள். பிரதானிகள் வந்தார்கள்; தளபதிகள் வந்தார்கள்; மணியக்காரர்கள் வந்தார்கள்; கர்ணீகர்கள் வந்தார்கள்; (கணக்கர்கள்). வீரர்கள் வந்தார்கள்; படைத்தலைவர்கள் வந்தார்கள். அத்தனை பேரும் ராணுவம் போல் வந்தார்கள். ஆயுதமும் கையுமாய் முன்னால் நடந்தார்கள். 48-53

## கூடவந்தோர் நினைப்பு

'சிங்கத்தைக் கொன்றுவது மன்னரிடம் தங்கப் பதக்கம் பெறவேண்டும்' என்று சிலர் நினைத்தார்களாம். 'புலியைக் கொன்று வீரத்தண்டை வாங்க

வேண்டும்' என்று சிலர் நினைத்தார்களாம். 'புலியைச் சுட்டு, புலித்தோலை உரித்து கேடயத்தில் ஒட்ட வேண்டும்' என்று சிலர் நினைத்தார்களாம். 'தங்கள் அரசருக்குக் கவரிமானை வெட்டி வால் கொண்டுவர வேண்டும்' என்று சிலர் நினைத்தார்களாம். 'தங்கள் வைப்பாட்டி மக்கள் மார்பிலே அணிய புலி நகம் கொண்டுவர வேண்டும்' என்று சிலர் நினைத்தார்களாம். 'இரண்டாவது மனைக்கு சவுரியாக கவரிமான் வால் கொண்டுவர வேண்டும்' என்று சிலர் நினைத்தார்களாம். 'கூத்தியாருக்கு மருந்து போடும் போது, சேர்த்துப் போட கரடியின் ஈரலைக் கொண்டுவர வேண்டும்' என்று சிலர் நினைத்தார்களாம். இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொன்றை நினைத்தபடி, காட்டைக் கலைக்க வெடிவைக்கும் வெடிகாரரர்கள், வேலேந்திய படை வீரர்கள் முன்னால் நடக்கப் படை சென்றது. 54-61

தூக்கிப் பிடித்த குந்தங்கள் வானமே விழுந்து விட்டது போல் முன்னால் நடக்க, ஒட்டகத்தின் முதுகிலே மேளம் பேரொலி செய்ய, மேகத்திற்குக் கூட இந்த ஓசை கிடையாது என்று ஒட்டகம் இறுமாந்து வர, கொட்டு, உடுக்கை, ஊதும் கொம்பு, கட்டுவலை, கைவேட்டைக் கத்தி; புலியைக் கௌவப் புறப்பட்டது போல் புறப்பட்டு வந்த நாய்கள்; குத்திட்டிகள்; கவண் வில்கள் இவற்றோடு சிலர் வந்தார்கள். அவர்களுக்கு பானை வயிறு. மூன்று முழம் தாடி; செம்பட்டை ரோமம்; காலிலே தோல் செருப்பு; கருநீலக் கச்சை—யார் இவர்கள்? இவர்களே காட்டு வேடர்கள். இவர்கள் வந்தார்கள்; கண்டார்கள்; வணங்கினார்கள். இவர்கள் முன்னால் நடக்க, வெள்ளைக் கொடி நடுவிலே வர, கருடக் கொடி முன்னே போக, இவை போடும் கோஷங்களைக் கேட்டு சீன தேசம் நடுங்கிற்றாம்;



மகத நாடு கலங்கிற்றாம்! கொச்சி மலையாளம் மலையிலேயே ஏறிக்கொண்டதாம்! இப்படி நாகம நாயக்கன் போய்க் கொண்டிருக்கும் போது: 62-72

## நற்சகுனமாதல்

செம்பூத்துப் பறவை இடமிருந்து வலமாகப் பறந்து, ஒரு பூமரத்தில் அமர்ந்து, தன் காதல் மனைவியான பெண் பறவையைத் தழுவிற்றாம். நாட்டுத் தலைவன் நாகம நாயக்கன் அதுகண்டு மகிழ்ந்தானாம். 'இது நல்ல சகுனம்; ராஜ சகுனம்' என்றானாம் ஒருவன். 'செம்பூத்து வலம் பாய்ந்ததால் முழு வேட்டை நடக்கும்' என்றானாம். 'அது தன் பெண் கூட்டோடு கூடியதால் இந்தக் காட்டிலேயே ஒரு கன்னியை நீங்கள் மணக்கக் கூடும்' என்றானாம். 73-76

## காட்டைக் கலைத்தல்

இதோ, பன்றிமலை அடிவாரம் வந்து விட்டது. நாலு பக்கமும் காட்டு வேடுவர்கள் வலை கட்டினார்கள். வேலிக்குப் பக்கத்தில் துப்பாக்கிக்காரர்கள் நின்றார்கள். எல்லோரும் குதிரையை விட்டு இறங்கினார்கள். பறைகள் குலவைச் சத்தமிட்டன. முரசுகள் முழங்கின. வேலேந்தியவர்களும், வில்லேந்தியவர்களும், ஈட்டியேந்தியவர்களும் அங்கும் இங்குமாய் ஓடிக் காட்டைக் கலைத்தார்கள். 77-80

## வேட்டை

பன்றி, முயல், கரடி, புலி, மான், காட்டு எருமை அனைத்தும் திக்குத் திசை தெரியாமல் ஓடினவாம். அவர்கள் அம்பால் அடித்தார்கள்; வேலால் அடித்தார்கள்; மறித்தார்கள்; பிடித்தார்கள்; துப்பாக்கியால் சுட்டார்கள். காட்டெருமையைக் கூட ஒளிந்திருந்து பிடித்தார

களாம்! பன்றியின் கன்னத்தில் வேல் பாய்ந்ததாம்! துப்பாக்கிச் சூடு நடந்ததாம்! சீறி வந்த புலிகள் வேல் பட்டுத் துடித்தனவாம். முயல்களும், கரடிகளும் வலையில் விழுந்தனவாம். மான்களை நாய்கள் கவ்வினவாம். எங்கும் ஒரே குத்து வெட்டு. ஒழுக்கமுள்ளவன், தாசியின் கையில் சிக்கியது போல, மான்கள் நாய்களிடம் சிக்கினவாம்! வள்ளலைப் பாடும் புலவரின் வறுமையைப் போல், மயில்கள் பறந்தோடினவாம்! இதற்கிடையிலேயும் ஒரு காட்டெருமை பெண்ணாசையைத் தூக்கியெறிந்த யோகியைப்போல் வலையை அறுத்துக் கொண்டு ஓடிற்றாம்! புலியைச் சுட்ட துப்பாக்கி ஓசை, மலையையே கலங்க வைத்ததாம். சிவபெருமானின் இடது பக்கம் உள்ள வியாக்கர பாதன் என்னும் புலியும், சந்திரனும், முயலும், மானும் கொஞ்சம் பயந்து, கொஞ்சம் மனம் தெளிந்தனவாம்.

81–91

## மானைத் தொடர்தல்

இதற்கிடையில் ஒரு மான். அது துப்பாக்கிக்கும் சிக்கவில்லை; வலையிலும் சிக்கவில்லை. கவிஞரைக் கண்டோடும் கயவரைப் போல் ஓடிற்றாம்! 'இதை விடுவதில்லை' என்று நாகம நாயக்கன் பின்னாலேயே ஓடினானாம்! அன்று மானைத் தொடர்ந்து ஓடிய ரகுராமனைப் போல், தாவித் தாவி ஓடினானாம்! சிறகில்லாத பறவை போல அது வெகு தூரம் ஓடிற்றாம். அதை விடாமல் தொடர்ந்த நாகம நாயக்கன் கடைசியில் கொன்று விட்டானாம்! ராமன் தொடர்ந்த மான் சீதையைப் பிரித்தது; இவன் கால் தொடர்ந்த மானோ ஒரு கட்டழகைக் கூட்டி விட்டது!

92-97

## சோலையை அடைதல்

சிங்கக் குட்டி போல் வில்லேந்திச் செல்கிறான் நாகம நாயக்கன். அவனுக்குத் தண்ணீர்த் தாகம். அங்கொரு



பூஞ்சோலை. அதற்குள்ளே நுழைகிறான். 'அருவியில் விழுந்து, மலர்களில் மிதந்து, ஆடிவரும் தென்றல், அவன் திருமுகத்து வியர்வையைத் தீர்த்து வைக்கிறது. கற்பக விருக்ஷம் இந்திரனைக் கண்டு மலர்களைப் பொழிவது போல், பூஞ்சோலை பூச்சொரிகிறது. சந்தன மரங்களின் மேல் சஞ்சரிக்கும் பைங்கிளிகள் சின்னம கூளப்பன் மகனுக்குச் சிந்து கவி பாடுகின்றன. 'இவர் வந்த வேளை, நல்ல வேளை' என்று மங்கை ஒருத்தி தூது விட்ட வண்டு போல், வண்டு பாடுகிறது. மையல் கொண்ட மன்னனுக்கு மாலையிட வந்து நின்ற தையலைப் போல, கொன்றைப் பூ மரம் கொம்புகளில் பூத்து நிற்கிறது. அத்தனையும் பார்த்து ஆனந்தமடைகிறான் நாகம நாயக்கன்.

98–104

## நவரத்தினமாலையின் வருணனை

பத்மினி, சித்தினி, அத்தினி, நந்தினி என்பது பெண்களில் நான்குவகை. அதில் முதல் சாதிப் பத்மினிப் பெண் ஒருத்தி. அவள் பெயர் நவரத்தினமாலை. அவள் மதன கலைவாணி; மதன சுரதானி. (காம லீலையில் வல்லவள்.) மதன ரதிக் கேணி. மதன சுக கல்யாணி. காமத்தின் குருபீடம், காமத்தின் கொலுக் கூடம்! காமத்தின் மணி மகுடம். காமக்கடலில் ஓடும் ஓடம். மாமுனிவர்களுக்கு அவள் வேதத்தில் ஓரங்கம். அந்த மாமுனிவருக்கு ஆசை எழுப்பும் அந்தரங்கம். அந்த முனிவர்கள் விரும்புகிற நல்ல சகவாசம். அவர்களது ஜீவனிலே கலந்து விட்ட லிங்கம். அவள் தெய்வ ரதி மகள். அவள் தெய்வக் குணக் கடல். அவள் தெய்வக் குவளை மலர். அனுமான் கொண்டு வந்த சஞ்சீவி. சிற்பிகள் எவ்வளவோ முயன்றும் அவளைப் போன்ற ஒரு சிற்பத்தைச் செய்ய முடியவில்லை. அதனால் பிரம்மாவே அவளைப் பொற்பாவையாகச் செய்து அனுப்பினான். யாரோடும் பேச மாட்டாள்; செவிலித் தாயோடு மட்டும்தான் பேசுவாள், அந்தச் சித்திரப் பூங்கொடி.

இன்னும் அவளை யாரும் அணைத்ததில்லை. இதழ் வாடவில்லை. வளர்ப்புப் பெண்களின் மடியிலேயே குடியிருக்கிறாள். அங்கும் இங்கும் ஓடிக் கண்ணீர் வடிக்கப்பட்டவளல்ல; போற்றி வளர்க்கப்பட்ட பூங்கரும்பு பொழுது போனால், பொழுது போனால் வாடிப் போகும் பூவல்ல அவள். மாறாமல் மணம் வீசும் மருக்கொழுந்து. சர்க்கரைப்பாகு நெருப்பிலிடும் போது பொங்கும். சிவக்கும்; பிறகு கருத்துப் புழுங்கி விடும். இவள் அப்படியல்ல; பொன்னிறமாக ஜொலித்து மணம் வீசும் சர்க்கரைப் பாகு. தேன் என்பது மலைக் காட்டுப் பூவிலே தான் தூங்கும். ஆனால் இவளோ, பூவிரித்த மஞ்சத்தில் போயுறங்கும் நவரசத் தேன். மலையிலே ஓடி, முள்ளிலே விழுந்து புரள்கின்ற மயிலல்ல இவள்; தத்தை போல் மெத்தையின் மீது விளையாடும் தோகை மயில். ஒவ்வொரு கொம்பாக ஓடி, கூவுகிற குயிலல்ல; தன் வீட்டுப் பொன்னூஞ்சலில் விளையாடும் குயிற்பேடு. சுற்றி ஒரு கூடு; நடுவே கிளிப்பேடு. அதற்குள் இருந்தே அது பேசும் பேச்சு. அப்படியல்ல இவள். மன்மத லீலை சொல்லும் கிளிப்பேடு. எல்லாப் பெண்களுக்கும் அன்னம் நடை கற்றுக் கொடுத்தது. இவளோ, அன்னத்திற்கே நடை கற்றுக் கொடுத்தாள். எந்த முத்தும் பயன்படப் பயன்படத் தேய்ந்து போகும். இவளோ, தேய்ந்து பயன்படும் முத்தல்ல; தோய்ந்து பயன்படும் முத்து. எல்லோரும் செப்புப் பாத்திரங்களில் ரத்தினங்களை மூடி வைப்பார்கள். இவளோ இரண்டு கொங்கைகளை செப்புக்களாகத் தாங்கிவரும் ஜீவரத்தினம். மன்மதன் பரமசிவனிடம் வைத்த வஞ்சத்தையே மாற்ற வந்த வஞ்சி. கண்ணுக்குள் கண்மணி போல், கண்மணிக்குள் பாவையைப் போல், பெண்ணுக்குப் பெண் பேராசை கொள்ள வந்த பேரழகு.

105-124



## அவளுக்கு நற்சகுனமாதல்

அன்று அவள் சொன்னாள்: ''அடி தோழி! குணமாலை! என் அன்புக்குரியவளே! இன்று என் இடது கண் துடிக்கிறது'' என்று. அதற்கு அந்தத் தோழி சொன்னாள்: ''இடது பக்கம் துடிக்கிறதென்று சொன்ன என்னருமை நவரத்தினமாலை! அடி கன்னி கழியாத காரிகையே! இன்று உனக்குச் சுகம் வரப்போகிறது'' என்று.

125-127

## அலங்காரம்

''நல்லது'' என்று சொன்ன நவரத்தினமாலை, 'பூங்காவில் பூப்பறிக்க வேண்டும்' என்று புறப்பட்டாள். தன்மீது வாசனைத் திரவியங்கள் பூசி, சிறந்த மஞ்சள் பூசிக் குளித்தாள். அதன் பின் சாந்து, புனுகு, ஜவ்வாது பூசிக்கொண்டாள். நன்கு சலவை செய்த ஜரிகை போட்ட கண்டாங்கி கட்டிக் கொண்டாள். செவ்வரி ஓடிய அந்தக் கண்ணழகிக்கு, தோழியர் சீவி வகிடெடுத்தார்; சேர்த்துக் குழல் முடித்தார். கண்ணுக்கு மை இட்டார். நெற்றிக்குப் பொட்டிட்டார். கட்டழகுக் கொங்கைக்கு தொய்யில் எழுதினார். பாதத்துக்குச் செம்பஞ்சுக் குழம்பு பூசினார். விலையுயர்ந்த பொன்னால் காலுக்கு மெட்டியிட்டார். வெள்ளித் தண்டையிட்டார். பாடகம் போட்டார். பசும் பொற் சதங்கையிட்டார். 'அரை முடி' என்னும் மேகலை மீது அரைஞாண் வைத்துக் கட்டினார். சேலைக்கு மேலே ஒட்டியாணம் போட்டார். பவளக் கொடி, சிவப்பு மாணிக்கத்தை ஈன்றது போல் கைகளுக்குச் சிவப்புக்கல் மோதிரமிட்டார். பவள வளையல், தங்க வளையல், பொற்கடகம் ஆகிய அத்தனை வளையல்களையும் சரியாக அணிவித்தார். பட்டு ரவிக்கை போட்டுவிட்டார். கழுத்தில் நகையாலும், முத்து மாலையாலும் பொன் மாலையாலும் அந்தப் பாக்கு மரத்தை

ஆபரணங்களைப் போட்டு மறைத்தார். வானத்துச் சந்திரன் ஒரு முத்தை ஈன்றெடுத்தது போல் மூக்கிலே ஒரு முத்தைத் தொங்க விட்டார். காதிலே காதோலை. மேற் காதுக்குக் கொப்பு, வாளி எல்லாம் அணிவித்தார். அந்தத் திருமகளுக்குக் கூந்தலிலே சந்திரப் பிறையைப் போன்ற திருவணியையும் சூட்டினர். அழகாகக் கொண்டை போட்டு விட்டார். அதைச் சுற்றிலும் முத்து மாலை கட்டினர்; அதிலும் ஒரு சுட்டியைக் கட்டி விட்டார். தங்கச் சிலைக்கே தங்கத்தால் நகை போடுவது போல, பூமாலை சூட்டி திருஷ்டி சுற்றினர். 128-142

## பூங்கா அடைந்து பூவெடுத்தல்

நவரத்தினமாலை சோலைக்குப் பூவெடுக்கப் புறப்பட்டாள். கூட யார் யார் போனார்கள்? தோழியர் பட்டியல் இது.

வங்கார மாலை,
முத்து மாலை,
குணை மாலை,
சிங்கார மாலை,
மோகன மாலை,
சம்போக வல்லி,
சரச வல்லி,
காம வல்லி,
அமிருத வல்லி,
நீல வல்லி,
மோக ரத்னம்,
மாது ரத்னம்
முத்து ரத்னம்,
வசந்த ரத்னம்,

—இவ்வளவு தோழியர்கள் சுற்றி வர, யான்கள் சுற்றி வரும் இளம் பெண்யானை போல் வந்தாள். அவள்





பூவெடுத்தாள். அவள் கையையே ஒரு கமலப் பூ என்று வண்டுகள் மொய்த்தன. அங்குமிங்கும் பூங்கொடியில் பூவெடுத்தாள் பூங்கொடியாள். தோழியரெல்லாம் சுற்றிச் சுற்றிப் பூவெடுத்தார்கள். மன்மதனுடைய அம்பு, மலர்தான் அல்லவா? அந்த மன்மதனுடைய பாணயத்தையே கொள்ளையிடுவதைப் போல் பூப்பறித்தார்கள். ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு பக்கம் போய் விட்டார்கள். கூட்டத்தைப் பிரிந்த அந்தக் குலமகள் இனம் பிரிந்த மானைப் போல் மெள்ள நடந்தாள். வெட்சிப்பூ. இருவாட்சி, மல்லிகை, செவ்வந்தி, பிச்சி, தோட்டுப்பூ, முல்லை, கொடிப்பூ, எல்லாம் எடுத்த பிறகு உயர்ந்த மரங்களின் மீதுள்ள கோட்டுப் பூமீது அந்தக் கொடிமகள் ஆசைப்பட்டாள்.

143—153

## கோட்டுப் பூ விரும்புதல்

காவிப்பூ என்று இரண்டு கண்கள் தன்னிடமே இருக்க, அழகான முகம், இரண்டு கைகள், இரண்டு கால்கள், ஆகிய ஐந்து தாமரைப் பூக்களும் தம்மிடமே இருக்க, எப்போதுமே நிறம் மாறாத முருக்கம் பூப்போல் இதழ் இருக்க, இரண்டு கொங்கைகள் பெரிய அரும்புகளாக இருக்க, வரிசையான முல்லைப் பூப்போல் பற்கள் இருக்க, அவையும் குமுத வாய்க்குள்ளேயே அணிவகுத்து நிற்க, சண்பகப் பூப்போல் மூக்கிருக்க, பணக்காரன் யாசகம் கேட்பது போல் அவள் ஒவ்வொரு மரமாகச் சென்று, 'ஏ, மந்தாரையே! செருந்தியே! மாமரமே! நான் அணிய ஒரு மலர் தரமாட்டீர்களா? பாதிரி மரமே, பூத் தர மாட்டாயா? பன்னீர் மரமே, பூச்சிந்த மாட்டாயா? மாதவியே, ஒரு மலர் தர மாட்டாயா? புன்னை மரமே, ஒரு பூத் தர மாட்டாயா? குங்கும விருக்ஷமே, ஒரு மலர் தர மாட்டாயா?

அம்பு விழித் தோழியர் அகன்று விட்டார். உங்களைக் கும்பிடுகிறேன் குயில்களே, சில மலர்களைக் கொத்தி போட்ட மாட்டீர்களா?' என்று ஏங்குகிறாள்; விங்குகிறாள்; ஏதேதோ பேசுகிறாள். பாவம்! அவளைப் பார்த்துக் குயிலும், கிளியும் வெட்கப்பட்டு ஓடி விடுகின்றன. அவள் ஒரு மரத்தின் அடியிலே பூங்கொடி போல் தனியாக நிற்கிறாள் 154—163

## தலைவன் அவளைச் சந்தித்தல்

அழகிய இளம் முலை கொண்ட அந்தப் பெண் தனியாக நிற்க, மன்னன் நாகம கூளப்ப நாயக்கன் அங்கே வருகிறான். 'அந்நாளில் தன்னை வென்று விட்டானே பரமசிவன், அவனை மீண்டும் வெல்ல வேண்டும்' என்று மன்மதனுடைய உருவம் எடுத்து, ஒரு அம்பு கிடைக்காதா என்று வருகிறானும் அவன். அவளைக் கண்டு விட்டான். 'இவள் கடல் கன்னிகையோ! நாக கன்னிகையோ! தெய்வப் பெண்ணோ? தேவலோக மேனகையோ? இல்லை! கண்கள் இமைக்கின்றன. கால் பூமியில் பாவுகிறது. ஆகவே இவள் மனிதப் பெண்தான்' என்று முடிவு கட்டி, அவள் காது குளிர அவன் கூறுகிறான்: 164—169

''உங்கள் ஊரெது? இந்த உலகமா, அந்த உலகமா? உங்கள் பெயர் என்ன? ஒரு வார்த்தை பேசக் கூடாதா? ஐவேலிக் கொடியில் அமர்ந்த சிவபிரானுக்கும மோகினி வடிவம் எடுத்த மோகன மங்கையும் நீங்கள்தானோ? பரமனால் எரிக்கப்பட்ட மன்மதனை பந்தாடுங் கையால் வந்தெழுப்பிக் கொண்ட மகராசி நீங்கள் தானோ? பலபேர் நளன் போலவே காட்சியளிக்க, உண்மையான நளனைக் கண்டு பிடித்து மாலையிட்ட தமயந்தியும் நீங்கள் தானோ? தெய்வ மங்கையரின் அழகையெல்லாம் ஒன்று திரட்டி அரும்பாடுபட்டு பிரம்மா உங்களை



உருவாக்கி விட்டானோ? அகலிகையின் மேல் ஆசைப் பட்ட இந்திரனை தன் காலடியில் மயக்கும் சமத்துப் பெண் நீங்கள் தானோ? 170—175

அலையிலோடியும், மலையிலாடியும் அவதிப்பட்டு மேகம் திரிவது உங்கள் கூந்தலுக்குத் தோற்றல்லவோ! உங்கள் நெற்றியைப் பிறைச் சந்திரன் என்று சொல்லலாம். ஆனால் அந்தப் பிறைச் சந்திரன் இப்படி ஒரு அழகான சுட்டியை அணிந்திருக்கவில்லையே! 176—177

பிரம்மா உங்களுக்குக் கொடுத்த புருவத்தைப் பார்த்தால், அதற்கு மன்மதனுடைய கரும்பு வில்லும் ஒப்பாகாதே! 178

திருமால் மீனாக வந்து வேதங்களைக் காப்பாற்றினார். எநத வேதத்தைக் காப்பாற்ற இந்த இரு விழிகளையும் படைத்திருக்கிறான் தேவன்? 179

அடேயப்பா! மன்மதனின் மீன் கொடி, அம்பு, அவனது கருப்பு நிறம் — இந்த மூன்றும் உங்கள் விழியிலேயே இருக்கின்றன. 180

நான் போருக்கு அஞ்சியதில்லை. வாட்படையையோ வேல் படையையோ கண்டு அஞ்சியதில்லை. ஆனால் இளமங்கையே! உங்கள் விழி அம்பைக் கண்டு பயப்படுகிறேன்! 181

மூக்குக்குக் குமிழை உவமை சொல்வார்கள். அந்தக் குமிழ் உங்களைப்போல் மூக்குத்தியா அணிந்திருக்கிறது? 182

கன்னம் மாம்பழம் என்றும், காது வல்லைக்கொடி என்றும் எனக்கு உவமை தோன்றுகிறது. ஆனால் அந்தப் பல்வரிசைக்கு ஒரு உவமை தோன்ற வில்லையே! 183

பவளத்தை உங்கள் இதழ் என்று சொல்லாம். ஆனால் இந்த இதழில் முத்தம் கிடைக்கும்; பவளத்தில் முத்தம் கிடைக்காதே! 184

மென்மையான முலையையுடைய பெண்ணே! உங்கள் சந்திர முகத்துக்கு உவமானம் சொல்ல ஒரு பொருளும் தோன்றவில்லையே! 185

'உங்கள் கழுத்து சங்கு போன்றது' என்று சொல்லலாம்; ஆனால் அந்த அசல் சங்கில் கையை வைத்து அழுத்தினால் நகம் பதியாதே! 186

உங்கள் தோள் மூங்கில் என்று சொன்னால், சூரியனுக்கு ஒப்பாக மின்மினிப் பூச்சியை உதாரணம் சொன்னதற்கு ஒப்பல்லவா? 187

காந்தள் மலர் ஏன் காட்டிலே பூத்தது? அது உங்கள் கைவிரல்களைப் போல் ஆகவேண்டும் என்று தவம் செய்து வரம் வாங்கப் போயிருக்கிறது. 188

தம்புராவை மீட்டி இசைப் பாடத் தெரியாத செம்பவளம், உங்கள் விரலுக்கெப்படி ஒப்பாகும்? 189

காட்டுக்கிளி உங்கள் வார்த்தைக்குத் தோற்று விட்டது. அதன் மூக்குமுனை போலிருக்கிறது உங்கள் கைவிரல் நகம் என்று சொன்னால் பொருந்துமா? 190

கவிஞர்கள் கவிதையைப் புரிந்துகொண்டு பெருங் காவியம்பாடி அரங்கேற்றுதல் போலும், பிரம்மா முதலில் தந்தச் சிமிழ் படைத்தான்; தாள வட்டம் படைத்தான்; வம்பைப் படைத்தான்; யானை அதன் கொம்பைப் படைத்தான்; தேங்காயைச் செய்து பார்த்தான்; பொற்குடத்தைப் படைத்துப் பார்த்தான்; இமயமலை முதல் எல்லா மலைகளையும் செய்தான். அவற்றையெல்லாம் செய்து பழகிய பின்னரே உங்கள் கொங்கைகளைச் சமைத்தான். 191-195



மன்மதன் உங்கள் முலையையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கண்ணிலிருந்த கருமணி உங்கள் முலையில் ஒட்டிக் கொண்டு விட்டதோ? 196

உங்கள் முலையால் உலகத்தில் ஏற்பட்ட பகைமை அடக்குவதற்குத்தானே சூரியனும், சந்திரனும், விநாயகரும் பிறந்தார்கள்? 197

உங்கள் வயிறு என்ன, ஆலிலையா? அதிலுள்ள ரோமங்கள் அந்த ஆலிலையிலே பள்ளிகொள்ளும் விஷ்ணு பகவானா? 198

தண்ணீரில் உண்டாகும் சுழிகள், உங்கள் வயிற்றிலே உண்டாகும் ரோமச் சுழிகளுக்கு ஈடாகுமா? 199

மென்மையான பெண்மையே! உங்கள் இடை இருப்பது போலவும் இல்லாதது போலவும் படைக்க இரண்டு பிரம்மாக்கள் இருக்கிறார்களா? 200

நீங்கள் முதற் சாதியான பத்மினி சாதியைச் சேர்ந்தவர்கள் என்பது தெரிகிறது. அதனால் உங்கள் மறைவிடமும் செந்தாமரைப் பூப்போல் இருக்கும். சந்தேகமில்லை! 201

வாழைத் தொடையும், அல்குல் மண்டபமும், மன்மத லீலைக்கு இந்த ஏழைக்கு இரங்கும் இடம் என்று - என்பதை நான் அறியவில்லையே! 202

உங்கள் முழங்கால்கள் வரால் மீனைக் கவ்விக் கொண்ட நண்டுகளோ? உங்கள் பொற்பாதங்கள் அந்த வராலைச் சுமந்த ஆமைகளோ? 203

ஐந்து தலைப் பாம்போ? ஐந்து விரல் படமோ? மேகத்தைக் கண்ட தோகை மயிலோ உங்கள் சாயல்? 204

உங்கள் பின்னழகைக் கண்டால் ரதியையா மன்மதன் நாடுவான்? உங்கள் முன்னழகைக் கண்டால் முனிவர்கள் தவமா செய்வார்கள்? 205

## அவளை வேண்டுதல்

தோழியர்கள் யாரும் இல்லாமல் ஏ, சொக்கும் மொழிப் பெண்ணே! இந்த வனத்தை நீங்கள் நாடி வரப்பெற்றது, நான் செய்த மாதவம்! 206

ஏதாவது ஒரு வார்த்தை சொல்லுங்கள்! உங்கள் வாக்கு வேதமா! இல்லை, கல்லால மரத்தடியில் தக்ஷிணாமூர்த்தி வடிவத்தில் பரமேஸ்வரன் சனகாதி முனிவருக்கு உபதேசித்த மந்திரமா? 207

நான் இமய மலையையும், வெள்ளி மலையையும் பார்க்க வேண்டும். கொஞ்சம் மேலாடையை நழுவ விடமாட்டீர்களா? 208

உங்களைக் கட்டியணைத்துக் கழுத்திலே உச்சி முகர்ந்தால், கடலும் நதியும் சங்கமமாகும் இடத்தில் தீர்த்தமாடிய பலனல்லவா! 209

உங்கள் சேலையைக் கொஞ்சம் விலக்கி விட்டால், முடிவே இல்லாமல் படுக்கக்கூடிய அந்த இடத்தை நான் பார்க்க மாட்டேனா? 210

என் தாகம் தீர ஒரு முத்தம் கொடுத்தால், உங்கள் சக்ரவாக முலைக்கு முத்து மாலையும், முத்த மாலையும் சூட்ட மாட்டேனா? 211

என் மார்பில் நீங்கள் நகக் குறியைப் பதித்தால், உங்கள் மார்பில் நான் மாணிக்க ஆபரணங்களைப் பூட்ட மாட்டேனா? 212

பரமசிவன் பாதி உடம்பில் ஒரு பெண்ணை வைத்தான். திருமால் ஒரு மங்கையை மார்பில் வைத்தான்.



பிரம்மா ஒரு பெண்ணை நாவில் வைத்தான். உங்களை என் மனதிற்குள்ளேயே நான் வைத்துக் கொள்ள மாட்டேனா? 213-214

அன்றைக்கு மலையைக் கொண்டு தேவர்கள் கடலை கடைந்த மாதிரி, நீங்களும் உங்கள் இரண்டு முலைகளையும் எனக்குத் தந்தால், நானும் காமக் கடலைக் கடைந்து அமிர்தமெடுக்க மாட்டேனா? 215

பட்டாடை சுற்றியிருக்கும் மன்மதனுடைய குளத்தை எனக்கு நீங்கள் விட்டுக் கொடுத்தால், அந்தக் குளத்துத் தண்ணீரினால், மூன்று போகம் விளைவிக்க மாட்டேனா? 216

உங்கள் அல்குல் என்ற முக்காணி வட்டத்தை எனக்களித்தால், ஏழையாகிய நான் அதில் உழுது பயிர் விளைவிக்க மாட்டேனா 217

வற்றாத கடல் போன்ற அந்த மன்மதன் அரண்மனைக்கு நான் ஒரு அஸ்த அந்திரம் எழுதி எனது ஆண்மையைக் காட்ட மாட்டேனா? 218

அந்த வயலில்-ஆலடி வயலில்—ஒரு அரசடி வட்டத்தை எனக்களித்தால், நன்றாகச் சாலடித்து, நல்ல வெள்ளைச் சம்பா நெல்லை விதைக்க மாட்டேனா? 219

மிருகத்தை வேட்டையாட வந்த என்னை காம வேட்டையாட விட்டால், உங்கள் முலை என்னும் மலையைப் பற்றி, குரல் கொடுத்து, ஆடை குலைய, புல்லும் அரை உள்ளாக்கி, மான் விழி இரண்டும் செண்பகக் காட்டில் குதித்துப் பாய்ந்து ஒதுங்கிப் பரதவிக்க, மோகவலையில் முயல் சிக்கியதைப் போல் சற்றும் சளைக்காமல் ஒரு கை பார்க்க மாட்டேனா? 220-223

அன்போடு என்னை நீங்கள் அரவணைத்து 'கன்னிப் போர் நடத்தடா சாமி' என்று, கலவிப் போருக்கு விட்

டால், நான் காமத் தேரில் ஏறி, நன்றாகக் கட்டி இறுகக் கலந்து, என் வேல் பாய போர்முனை காட்டி, முன்னமுகும், பின்னமுகும், கார் கூந்தலும் பின்ன, இடையிலே வந்து வீரக்கொடி விளையாட, தண்டையிடும் ஓசை, மேளம் தாளம் போல் கேட்க, சரிந்து விழுந்த வண்டுக் கூந்தல் பகைவர்கள் போல் பறக்க, முலை என்னும் மத யானையைக் கைப் பிடியாகப் பிடித்து, சங்கு முழங்கி, சமகால போகம் செய்து போரை முடித்து மன்மதனை வெல்ல மாட்டேனா? 224-229

தெய்வ ரம்பை போன்ற நீங்கள், உங்கள் இளமை என்னும் குளத்தில் என்னை இறக்கி விட்டால், சேலை ஒரு பக்கம் சரிந்து கிடக்க, இரண்டு தாமரை மொட்டுக்கள் மார்பிலே அழுந்த, முகமென்னும் தாமரைப்பூ என் முகத்தைத் தடவ, இடது கைத் தாமரைப்பூ முதுகைத் தடவ, வலது கைத் தாமரைப் பூ பிடரியை வளைக்க, இரண்டுகால்களும் இடுப்பைவளைக்க, இரண்டு கெண்டை விழிகளும் என் மீது போராட, குமுத இதழ்களில் தேனூற, கழுத்திலுள்ள பாசி மணி அறுந்து விழ, சங்கு முழக்க விழுந்து, உடம்பு குளிரும்படி ஆசை தீர்க்க மாட்டேனா? 230-235

உங்கள் நடு மண்டபமாம் விளையாட்டு மேடையில் சதுரங்கம் ஆடும்படி என்னை அழைத்தால், கால்பலன் கொண்டேற்றி, காரானை முட்டவிட்டு, குதிரைகளைச் சுற்ற விட்டு, ஆனந்தமான சகடத்தில் ஏற்றி, போட்ட காயெல்லாம் ஜெயிக்கின்ற காயாகப் போட மாட்டேனா? 236-238

காதலவோடிய கண்ணழகி, தனியாக என்னை நீங்கள் சூதாட வரச் சொன்னால், குங்குமக் காய் முலைகளைக் கூட்டிக் கலந்தாடி அங்கத்திலுள்ள பசலையெல்லாம் போக விட்டு, விந்தை தரும் சிவப்பை மெள்ள நிறுத்தி,



இப்படி நாகம நாயக்கன் மழை பெய்யத் துடிக்கும் மேகத்தின் முன்னால் வருண ஜபம் செய்வது போல், தானே காம வேகத்தில் துடித்துக் கொண்டிருக்கும் நவரத்தினமாலைக்கு அன்புமொழி கூறி, கைகளைத் தொட்டான்; மயிர்க் கூச்செறிந்தான். 257-258

## கந்தர்வ மணம்

(இனி அவள் மணம் முடிப்பதும், பரிவாரங்கள் தேடி வருவதும், தலைவன் நிலக்கோட்டை திரும்புவதும் சுருக்கமாகச் சொல்லப்படுகின்றன)

நாகம நாயக்கனுக்கு அவள் இணங்கினாள்.

முல்லையும், மல்லிகையும் படர்ந்த மண்டபத்தில், பூவையே படுக்கையாக விரித்து அவர்கள் கலவி நடத்தினார்கள்.

இந்த ஆனந்தத்தை விளக்க முடியாது. பாடலைப் படித்தாலே புரியும்; சுகம் தெரியும். 259-272

## தலைவனை சேனைகள் தேடி வருதல்

எங்கெங்கோ தேடிவிட்டு, சேனைகள் எல்லாம் கடைசியாக நாகம நாயக்கனைக் கண்டுபிடித்தன. சேனைகள் வரும் சத்தத்தைக் கேட்டுவிட்டு, நவரத்தின மாலையை ஒரு ஓரத்தில் நிறுத்தி விட்டு, சேனைக்கு முன்னால் தோன்றினான் நாகம நாயக்கன். காட்டில் இருந்து மன்னன் வருவதைக் கண்ட சேனைகள் சூரியனைக் கண்ட தாமரை போல் மலர்ந்தன. 273—277

## தலைவன் ஊர் திரும்புதல்

நாகேந்திரன் பல்லக்கில் ஏறி, சேனை பரிவாரங்களோடு நிலக்கோட்டைக்குத் திரும்பினான். திருமாலை

யும் லட்சுமியையும் சேவித்தான். தீர்த்தமாடினான். திருவடி பெற்றான். யானை மீதேறிப் புறப்பட்டான். 278—281

## பட்டணப் பிரவேசம்

ஊராரெல்லாம் மேள தாளங்களோடு அவனை வரவேற்றார்கள். ஆயிரம் பட்டப் பெயர் சொல்லி அவனை அழைத்தார்கள். 'சாமி, பராக்! பராக்!' என்று சிலபேர் கட்டியங் கூறினார்கள். சில பெண்கள் கவரி வீசி வந்தார்கள். சில குமரிப் பெண்கள் ஆரத்தி எடுத்தார்கள். மாலை சரிய மங்கையர் வந்தார்கள். சேலை சரிய சேயிழையார் சிலர் வந்தார்கள். தனக்கு மாலை தருவார் என்று சிலர் ஓடி, கைகள் மெலிந்து வளையலை இழந்து சிலர் திரும்பினார்கள். மன்னனோடு செல்லும் மனதைப் பிடிக்க ஓடுவதுபோல் சிலர் ஓடினார்கள். நவரத்தினமாலை அவன் உதட்டிலே கடித்த காயத்தைக் கண்டு, தங்கள் உதட்டைத் தாங்களே கடித்துக் கொண்டு போனார்கள் சில பெண்கள். இப்படி எத்தனையோ மான்கள் எதிர்ப்பட்டும் அந்த ஒரு மானையே எண்ணிய வேந்தன் அரண்மனைக்குள் நுழைந்தான். 282—294

## அவள் தேடுதல்

அவன் நிலக்கோட்டைக்கு வந்து விட்டான். நவரத்தினமாலையோ அங்கே தேடினாள், தேடினாள், தேடிக்கொண்டே இருந்தாள். பைத்தியக்காரி போல் இருந்தாள். படுத்தாள்; எழுந்தாள். மன்மத பாணம் மார்பிலே ஊடுருவ, கூர்மையான வேல் தைத்தவள் போல் கொதித்தாள். காலையே ஆயுதமாகக் கொண்ட சேவலைக் கொடியாகக் கொண்ட முருகன், கையிலே ஆயுதமாகக்கொண்ட வேலைப்போன்ற விழியுடையவள், திருமாலின் ஆயுதமான சங்கைப் போன்று, கண்ணீர் முத்துக்களை உதிர்த்தாள். 295—301



## அவள் புலம்பல்

அவள் புலம்பினாள்: தவித்தாள்.

(இந்தப் புலம்பல் எல்லோருக்கும் புரியும்படி தெளிவாக இருப்பதால் உரை எழுதாமல் விடப்பட்டது.) 302-314

## தோழியர் காணுதல்

குன்றுகளைத் தாங்கும் கொடிபோல் மலர் பறித்த கட்டழகைக் காணாமல், தோழியரெல்லாம் தேடிவந்து அவளைக் கண்டுகொண்டார்கள். 315-320

## கைத்தாங்கலாக அழைத்தேகல்

கையே தலையணையாகப் படுத்துக் கிடந்தாள் அவள். ஐயோ பாவம்! தூக்கமோ, பசியோ, தோழியரைக் காணாத ஏக்கமோ, மன்மதனுடைய கண்பட்ட திருஷ்டியோ, தெய்வக் குற்றமோ என்றெல்லாம் திகைத்து அவளது சேலையைக் கட்டிவிட்டு, மாந்தளிரால் விசிறி வீசி, மதிமுகத்து வியர்வையைத் துடைத்து, ஏந்திழையவள் மூர்ச்சையைத் தெளிவித்து எடுத்துச் சென்றார்கள். அவள் உடம்பில் பட்டிருந்த நகக் குறிகளைக் கண்டு, 'இவையெல்லாம் எப்படி வந்தன?' என்றார்கள். திருட்டுக் கள்ளி சொல்வாளா? தோழியர்கள் பயந்து போனார்கள். மெள்ள அவளை எடுத்துக் கைகொடுத்து அவள் வீட்டுப் பஞ்சணையில் சேர்த்தார்கள். காம நெருப்பில் அவள் மார்பில் இருந்த முத்து மாலைகூடப் பொரிந்து போயிற்று. அவள் அயர்ந்து படுத்தாள். 321-330

## அவளை உபசரித்தல்

சகிமார்கள் இதைச் சகிக்க முடியாமல், உஷ்ணக் கோளாறு என்று குளிர்ச்சி உண்டாக்கினார்கள். அவளுக்குக் கோபம் வந்தது. திட்டினாள். 331-332

## தலைவன் மாளிகைக்கு அனுப்புதல்

உடனே பல்லக்கு வந்தது. தோழிப் பெண்கள் சூழ்ந்து வந்தார்கள். தாய், மகளை நிலக்கோட்டைக்கு அனுப்பினாள். குணமாலை என்னும் தோழியும் கூடப் போனாள். நாகம நாயக்கனும் அவளும் நாள்தோறும் அனுபவித்தார்கள். நவரத்தினமாலை நல்ல மக்களைப் பெற்று மகிழ்ச்சியாக இருந்தாள். 369-372

## வாழ்த்து

சீர் வாழ்க—உலகம் செழித்து மிக வாழ்க!

(ஒன்பது ஊர் நிலக்கோட்டைப் பகுதி வாழ்க.)

வெள்ளை உபயக் கொடி வாழ்க!

நிலக்கோட்டை வாழ்க!

நாகம கூளப்ப நாயக்கன், மகாலட்சுமியின் கருணையோடு நாள்தோறும் வாழ்க!

# கூளப்ப நாயக்கன் காதல்

### காப்பு

### வெண்பா

பேராரும் பெஞ்சைப் பெரியநா கேந்திரன்மேற்
சீராருங் காதலையான் செப்பவே — நேராரும்
அக்கனித ரச்சொலிமுன் அப்பனைவ லத்தில்வரும்
கைக்கயுமு கக்கடவுள் காப்பு.

### நூல்

### கடவுள் வாழ்த்து

பொன்மாது மேவுதிம்ம ராயர்அருள் பூண்டிருக்கும்
நன்மா நிதிபெரிய நாயகன்மேற் காதல்சொல,

வந்துதவு சொல்மதுர வாக்குதவி எப்பொருளுந்
தந்துதவ வேண்டுமெங்கள் தந்தி முகத்தோனே. 2

ஆளும் பெருமாள் அகோபிலமால் மெய்யருள்எந்
நாளும் பெறும்பெரிய நாயகன்மேற் காதல்சொல 3

ஏடும் மணிவடமும் ஏந்துஞ் சரஸ்வதியே
ஆடுமயில் ஏறிவரும் ஐயனே முன்நடவாய். 4

### குரு வணக்கம்

கோமுனிவர் கொண்டாடும் கூடற் பரஞ்சோதி
மாமுனிவர் செம்பொன் மலர்ப்பாதம் நான் மறவேன். 5

### அவை யடக்கம்

நாட்டு புகழ்பெரிய நாயகன்மேற் காதலைநான்
சூட்டுகவி நாவலர்முன் சொல்லத் துணிந்ததுதான் 6

தானந் தவயோக தத்துவமில் லாதொருவன்
ஞானந் தெளிந்தவர்க்கு நல்லறிவு சொல்வதொக்கும். 7

தெள்ளமுதம் ஊட்டிஉரை திருத்தி வளர்த்தெடுத்தோர்
கிள்ளை குழறுமொழி கேட்டு மகிழ்வதுபோல், 8

6

நன்னயவில் வேள்பெரிய நாகேந்த்ரன் என்கவியில்
என்னவழுக்கண்டாலும் இன்பமெனக்கொண்டருள்வான்

## தசாங்கம்

### மலை

தேனளந்த கானவர்க்குத் தேவ ரமுதளக்க
வானளந்து நிற்கும் வராக கிரிவேந்தன்; 10

### ஆறு

கன்னி யமுனையொடு கங்கை கலந்ததுபோற்
பொன்னி கலந்த புனற்குடப மாநதியான்; 11

### நாடு

வண்ணக் குவிமுலையார் மஞ்சள்நீ ராரேடிப்
பண்ணைப் பயிர்வளர்க்கும் பாண்டி வளநாடன்; 12

### ஊர்

வட்ட மதிக்களங்கம் மாறத் தடவுதல்போல்
இட்டகொடி யாடும் இயல்சூழ் நவபுரியான்; 13

### மாலை

கொத்தார் கருங்குழலார் குத்துமுலை பாயமணி
முத்தாரம் பின்னலிடு முல்லைத் தொடைமார்பன்; 14

### பரி

ஓகைதந்து போர்க்களத்தில் உட்புகுந்து தாள்முறி
வாகைதந்து மீண்டுவரும் வாருநட னப்பரியான்; 15

### யானை

சண்டையிற்பெர குங்கொடித்த லக்தகர்த்து வஞ்சரைக்கைக்
கொண்டெடுத்த றைந்துரப்பு கும்பஉக்ர குஞ்சரத்தான்



### குடை

வின்பிறையை வெல்லநில மீதின் முளைத்தெழுந்த
தண்பிறைபோல் ஓங்கும் நவரத் குடையுடையான்; 17

### முரசு

உடைதிரைகள் குமுறுகடல் ஒலியுமுகில் இடியுமென
அடையலர்கள் செவிகுடைய அதிருமொலி மணிமுரசான்;

### ஆணை

அஞ்சினர் வாக்கிலிருந் தம்புபோல் ஓடிமட்டு
மிஞ்சினர் மார்புருவி வீம்படக்கும் ஆணையினன். 19

### பிற சிறப்புக்கள்

வட்ட நிலம்புரக்கும் மாரன் குமாரவர்க்க
பட்டமெனக் கட்டிவைத்த பட்டாபி டேகபரன்; 20

மிக்கஅருட் சொக்கேசர் மீனாட்சி தம்மருளால்
திக்கு விசயஞ் செலுத்துகின்ற செங்கோலான்; 21

சிற்றமுட னேதான் சிவிகைதனில் ஏறுமுன்னே
வெற்றரசர் பின்னிடப்போர் வென்றுவரும் சேனையினன்;

கற்கோட்டைஎன்றவர்மேற் கண்சிவந்து கண்டவர்செம்
பொற்கோட்டை என்னப் புகழும்திலக் கோட்டையினன்;

சித்தமகி ழேந்த்ர சேகராசன் கண்மணிபோல்
வந்ததுரை சிங்கமெங்கள் மால்பெரிய நாகேந்த்ரன்; 24

வாணிபுகழ் வல்லக்கா வார்குலத்தைக் கொண்டுவந்த
தோணிவெனும் பெஞ்சைத் துரைப்பெரிய நாகேந்த்ரன்;

பொன்விலங்க வச்ரப் பொடிவிலங்கப் பொற்கதவு
முன்விலங்கப் பின்விலங்க முத்திலங்கும் வாசலினன்; 26

ஒட்டகட மானத் தொனிமுழங்கப் பேரிகைதம்
பட்டம் முழங்கப் பரிமுழங்கும் வாசலினன்; 27

கட்டிவருஞ் சிங்களத்தார் கப்பம்வரக் காரானைக்
குட்டிவரச் சீனர்திறை கொண்டுவரும் வாசலினன்; 28

ஆடை வழங்க அனம்வழங்க யாசகர்க்கு
மாடை வழங்க மனுவ ர்கும் வாசலினன்; 29

சேலாடுங் கூர்விழியார் சென்றுடக் கைவசந்தன்
கோலாடப் பங்கயப்பெண் கூத்தாடும் வாசலினுள்; 30

மாமறைநூல் பொய்த்தாலும் வாரிதிநீர் பொய்த்தாலும்
சோமரவி பொய்த்தாலும் சொன்னமொழி பொய்யாதான்; 31

அண்டர்தரு வுக்கும் அருங்காம தேனுவுக்கும்
கொண்டல் தனக்கும் கொடைபயிற்று செங்கரத்தான்;

சித்தசரா சேந்த்ரன் திருமலை கண்டமன்னன்
மைத்துனவே ளாக வரும்பெரிய நாகேந்த்ரன். 33

## கொலுவிருத்தல்

நீளும் பெருவாழ்வும் நீதிகளும் மேலோங்க
ஆளும் புவிபுரக்கும் அந்நாளி லேயொருநாள் 34

ஆரணஞ்சேர் வையை அருந்தீர்த்தந் தானாடி
நாரணனைத் தாள்போற்றி நாமதீர்த் தம்பருகி, 35

மிக்ககன காரியப்பேர் வித்வச னங்கள்துரை
மக்களுடன் இன்பரச வர்க்க அமுதருந்திச் 36

சந்தனங்கத் தூரி சவாதுகதம் பம்பூசிச்
சுந்தரஞ்சேர் முத்துத் துராயிலங்கப் பாகைகட்டி, 37

மாணிக்கம் பச்சை வயிரவயி டூரியத்தால்
ஆணிப்பொன் னூற்சமைத்த ஆபரண முந்தரித்து, 38

சங்கீதம் பாடச் சகலசன மும்போற்றச்
சிங்கா சனக்கொலுவில் தேவேந்த்ரன் போலிருந்தான்.

## வேட்டை மேற் செல்லல்

அந்தமணி மண்டபமாம் ஆத்தானந் தன்னில்ஜயன்
சிந்தையுற்று வேட்டையின்மேற் சென்றுவர வேண்டுமென்று 40

கட்டியரை நோக்கிக் கனவேட்டைக் காரருக்கும்,
பட்டணத்துச் சேனை பதிகளுக்குஞ் சொல்லுமென்றான்.

அங்கிருந்து கோமான் அரண்மனையின் உட்புகுந்து
தங்கரேக் கென்னத் தயங்குநிசார் தொட்டிறுக்கித் 4

துப்பட்டா கட்டிவச்ரச் சோடிட்டுத் தூணிகட்டி
ஒப்பிட்டார் கச்சை உடைப்பட்டை யூடுகட்டி 43



வர்ணமணி யாழி வனசமலர்க் கையிலிட்டுச்
சொர்ணமய மாய்ச்சமைத்த தோற்கவசம் காலிலிட்டு

வாய்ந்தஉறை விட்டால் மருவலர்கள் மார்புறையாப்
பாய்ந்த சமுதாடு பாங்கணைத்து விற்பிடித்து 45

கேழல் புலியானைக் கெர்வங் கலையடக்க
ஆளி மலைமுழைவிட்(டு) ஆலித் தெழுந்ததுபோல் 46

புள்ளிருந்த கூர்நெடுவேற் போசன் அரண்மனையின்
உள்ளிருந்து கோட்டை ஒலிமுகத்து வாசல்வந்தான் 47

## பரிவாரங்கள்

கொற்றக் குடைபிடிக்கக் கொம்பூதப் பேரிகையும்
வெற்றிமுர சுந்தொனிக்க வீரசின்னந் தான்முழங்க 48

காலின் கடுமைதனைக் காற்கடுமை யாக்கும்இதன்
காலின் கடுமையெனும் கந்துகமேற் கொண்டருளி 49

வெற்றிவடி வாள்பிடித்து வெம்பரியின் மீதேறிச்
சுற்றமெனச் சுற்றுந் துரைமக்கள் சூழ்ந்துவர 50

வீரியப்ர தானிகளும் மெச்சுதள கர்த்தர்களும்
காரியப் பேர்மணியக் காரர்கரு ணீகர்களும் 51

தாக்குதுடி யூழியப்ர தாப வசீகரரும்
ஆக்க மிகுசேர்வை ஆனகுறிக் காரர்களும் 52

அச்சமில்லா ராணுவப்பேர் அத்தனையுஞ் சோடுகட்டிக்
கச்சைகட்டி ஆயுதமுங் கையுமாய் முன்நடக்க 53

சிங்கத்தை யானையுஞ் சென்றுகுத்தி எங்கோமான்
தங்கப் பதக்கந் தனைவாங்க வேண்டுமென்றும் 54

கண்ட பெரும்புலியைக் கைக்கோலாற் கொன்றுகுத்தித்
தண்டை மிகுவிருது தான்வாங்க வேண்டுமென்றும் 55

துட்டஞ் செயும்புலியைச் சுட்டந்த வெம்புலித்தோல்
ஒட்டும் பரிசைக்(கு) உரித்துவர வேண்டுமென்றும் 56

வெண்கவரி எங்கள்திம்ம ராயருக்கு வீசவென்னே
வண்கவரி மானைவெட்டி வால்துணிக்க வேண்டுமென்றும்

வைத்திரும்வைப் பாட்டிபின்னே மார்புக் குடைமைபண்ணக்
குத்திப் புலிநகங்கள் கொண்டுவர வேண்டுமென்றும் 58

கொண்ட இளைய குடியாள் முடிமயிர்க்கு
மண்டு கருங்கவரி வால்துணிக்க வேண்டுமென்றும் 59

வாய்த்த கரடி மணிவிரல் பெய்த்தெடுத்துக்
கூத்திக் கிடுமருந்து கூட்டியிட வேண்டுமென்றும் 60

ஒன்றொன் றொருவர்மனத் தந்துச் சிலர்ஏக
வென்றி வெடிகாரர் வேற்காரர் முன்னடக்க, 61

## படை செல்லல்

தாளை பிடித்த சவளப் பெருக்கம்உயர்
வானம் விழுதுவிட்ட வண்ணமாய் முன்னடக்க 62

கொண்டேகுந் தன்மேளக் கொள்கைபோற் பேசுமிக்க
உண்டோ இவேயோஎன்(று)ஒட்டகம்அஞ் ஞாந்துவர, 63

கொட்டுந் துடியும் குறித்தகரிக் கொம்புகளும்
கட்டும் பெருவலையும் கைவேட்டைக் கத்திகளும் 64

காட்டுப் புலிக்கழுத்தைக் கவ்வும் புலிபோலக்
கூட்டமிட்ட ஞாளிகளும் குத்திட்டி யுங்கவணும் 65

சால்வயிறும் மூன்றுமுழத் தாடிகளுஞ் செத்தவேயும்
காவிவிடு தோலடியும் காங்கிட்ட கச்சையுமாய்க் 66

கானவர்கள் வந்துகண்டு கைகுவித்து முன்னோடச்
சேனைநடு வெள்ளைச் செயடால் இணைத்துவர 67

போய்அநுமன் பாய்ந்த புகழ்பொரு மற்கதிரைப்
பாயத் திரிவதுபோற் பைங்கருட டாலேக 68

சந்த்ரோ தயம்போல் தயங்குஞ் சுருட்டிவரச்
செந்தூளி கண்டுவட சினங் குடியேற 69

தம்பட்ட வோசை தனக்குமக தங்கலங்கக்
கொம்புத் தொனிகேட்டுக் கொச்சி மலையேற 70

மங்கலஞ்சேர் பெஞ்சைநகர் வாழ்பெரிய நாகேந்த்ரன்
எங்கள்பிரான் வேட்டைக் கெழுந்தருளும் அவ்வழியில் 71

## நற்சகுனமாதல்

போத்தொன்றிட் டத்திருந்து போய்வலத்தோர் பூரத்தில்
வாய்த்தபே டொன்றை மருவிக் குரலெழுப்ப 72



மண்டலிகர் கண்டனெனும் மால்பெரிய நாயகடத்
தண்டலஅது கண்டுநகை தந்து மனமகிழ்ந்து 73

ராச சருனமென்ன ராசேந்த்ரன் முன்னோடி
யோசனையி லுற்சகுன உண்மையறிந் தானொருவன் 74

'வந்தெதிரே போத்து வலம்பாயக் கண்டதனுல்
முந்தவிந்தவேட்டை முழுவேட்டை யாய்க்கிடைக்கும் 75

குக்கில்வனப் பேட்டைக் குரலெழுப்பிக் கூடியதால்
கைக்குள்வசமாக இன்றோர்கன் னிமணம் கூடும்' என்றான்.

## காட்டைக் கலைத்தல்

அவ்வார்த்தை சொல்லமகா ராசனுங் கூளேந்த்ரன்
மைவாய்த்த பன்றி மலைச்சாரல் வந்தணுகி 77

நாலிடமும் கானவரை நாடிவலை கட்டவிட்டுக்
கோலியகட் டாப்பிற் குழற்கார ரைநிறுத்தி 78

ஏறும் பரிவிட் டிறங்கிப் படைக்கலிப்பு
மீறுந் தொனிமுரசு மேகங்கள் போல்முழங்க 79

வேலாளும் வில்லாளும் வெல்லும் எறியீட்டிக்
காலாளு மாய்ப்பரந்து காட்டைக் கலைத்துவிட்டார். 80

## வேட்டை

பன்றி முயல்கரடி பாய்ப்புலிபுல் வாய்கடமா
ஒன்றொடொன்று தட்டுண் டுலைந்து கலைந்தோட 81

எய்வாரும் வேலால் எறிவாரும் ஒன்றையொன்றை
வைவாரும் சுற்றி மறிப்பாரு மாய்நெருங்க 82

கட்டாப்பில் வந்த கடமாவைப் பின்வாங்க
ஒட்டாமற் குத்தி ஒளிவிருந்த பேரிழுக்க 83

கட்ட புகைவழியே தூக்கவரும் பன்றியுடல்
தட்டுருவி யோடத் தகட்டலகில் வேல்பாய 84

வாலடித்து மேல்பதுங்கி வாய்பிளக்க வான்கிழிக்க
வேல்பிடித்து வீரர்குத்த வீழ்புலிக்கு மேல்துடிக்க 85

வலேயில்விழு சரடிமுயல் மரையின்மிசை குமலிவிழ
அலகின்மிசை பிடரின்மிசை அடிகள்விழ உடல்பதற 86

செவ்வியோன் வேசிகையிற் சிக்கி உழல்வதுபோற்
கவ்வியநாய்க் காலிற் கவரிமான் வீழ்ந்துழல 87

கூடும்மயிற் கூட்டம் கொடுக்கின்ற தாதாவைப்
பாடும் புலவர் கவிபோற் பறந்தோட 88

வட்டமுலே மின்னார் மயக்கறுத்த யோகியைப் போற்
கட்டு வலேயறுத்தோர் கான்மேதி போனதுவே 89

கொட்ட மிடும்புலியைக் குண்டுதன் றுங்குழலாக்
கட்டதொனி வெற்பைத் தொடர்ந்து சிலேயோட 90

எம்மான் இடப்புலியும் இந்துமுய லும்மானும்
கைமானும் சற்றே கலங்கி மனந்தேற— 91

## மானேத் தொடர்தல்

இவ்வண்ணம் ஐயன் இயல்வேட்டை யாடஒரு
செவ்வண்ண மான்வலேயிற் சிக்காம லேகுதித்து 92

பற்றவரும் பேர்க்கும் பதிகுழற்கும் எட்டாமல்
உற்றகவி வாணரைக்கண் டோடும் உலுத்தரைப்போல்

போங்கடுமை கண்டு புகழ்பெரிய நாகேந்த்ரன்
வாங்கு சிலேயும் வடிக்கணேயு மாய்விரைந்து 94

மானேடப் பற்றஅன்று வந்தரகு ராமனேப்போல்
தானேடப் பின்னேடித் தாவிக் குதிகுதித்துப் 95

பாரிவிற இல்லாத பட்சிபோற் செல்லநெடுந்
தூரந் தொடர்ந்து தொடுங்கணேக்குப் பூசையிட்டான் 96

மால்தொடர்ந்த மான்ஓர் மயிலேப் பிரித்த(து)ஐயன்
கால்தொடர்ந்த மான்ஓர் கருங்குயிலேக் கூட்டியதே! 97

## சோலேயை அடைதல்

சிங்கத்தின் குட்டி சிலேஏந்திச் செல்வதுபோல்
அங்கொருபூங்காவில்விடாய் ஆறத் தனிப்புகுந்தான் 98

துன்று தடஞ்சுனேநீர் தோய்ந்துமலர்த் தாதளேந்து
தென்றல்வந்தென் ஐயன் இருமுகத்தின் வேர்வகற்ற 99



கற்பகக்கா இந்திரனேக் கண்டுமலர் சிந்துதல்போல்
பொற்புடையோன் மெய்குளிரப் பூங்காவும் பூச்சொரிய

சந்தனத்தின் மீதிருந்து சஞ்சரிக்கும் பைங்கிளிகள்
சிந்தமன்செய்க் கின்பம்வரச் சிந்துக் கவிபாட 101

இக்கிருக்கும் வேளேநல்ல ஏகாந்த வேளேயென
மங்கைநல்லாள் தூதுவிட்ட வண்டுபோல் வண்டுரைய

மையல்கொண்ட மன்னனுக்கு மாலேயிட வந்துநின்ற
தையலார் போலச் சரக்கொன்றைக் கொம்பிலங்க 103

நங்கோன் துரைபெரிய நாகேந்த்ரன் அவ்வனத்தின்
சிங்காரம் பார்த்துலவிச் சிந்தை மகிழ்போதில்— 104

## நவரத்தினமாலேயின் வருணனே

சாதியொரு நான்கின்முதற் சாதி பதுமினியாம்
மாது நவரத்ன மாலேயெனும் பெண்பெருமாள் 105

மதன கலேவாணி மதனகர தாவி
மதனரதிக் கேணி மதனசுப கல்யாணி 106

காம குருபீடம் காமக் கொலுக்கூடம்
காமக் கிரீடமின்பக் காமக் கடலோடம்: 107

மாமுனிவர் வேதஅங்கம் மாமுனிவர் அந்தரங்கம்
மாமுனிவர் ஓதுசங்கம் மாமுனிவர் ப்ராணலிங்கம் 108

தெய்வ ரதிதேவி தெய்வ குணவாவி
தெய்வச் செழுங்காவி தெய்வமலேச் சஞ்சீவி; 109

கம்மியன்கை யாலடித்துக் காய்ச்சிவெட்டித் தீராமல்
செம்மலரோன் கைம்மலரால் செய்துவிட்ட பொற்பாவை

வாய்பேசா வண்ணம் மதிலொட்டி நில்லாமல்
தாய்பேசப் பேசியின்பந் தந்துலவு குபசித்ரம்! 111

கையாற் பிடித்தொருவர் கட்ட இதழ் கன்றுமல்
மையார் குழலார் மடியிருக்கும் பூமாலே! 112

காற்றிலடி பட்டலேந்து கன்றுக் கரும்பாமல்
போற்றி மடவார் வளர்த்தெடுத்த பூங்கரும்பு! 113

மொய்க்கும்மணங் குன்றி முகங்கருகி வாடாமல்
மெய்க்குமணம் எந்நாளும் வீசும் மருக்கொழுந்து! 114

பொங்கிச் சிவந்து சுறுந்துப் புழுங்காமல்
தங்கநிற மாகச் சமைந்த மணப்பாகு! 115

ஓங்கு மலைக்காட்டி னுள்ளிருந்து தூங்காமல்
தூங்குசப்ர மஞ்சமிசைத் தூங்கும் நவரசத்தேன்! 116

மொய்த்த மலைக்காட்டு மூன்று டலையாமல்
மெத்தையின்மே லேறி விளையாடுந் தோகைமயில். 117

கொம்புதொறும் போய்த்தாவிக் கூவித் திரியாமல்
அம்பொன்மணி யூசலிருந்(து) ஆடுங் குயிற்பேடு! 118

கொஞ்சி மொழிகுழறிக் கூட்டிற் கிடவாமல்
செஞ்சொல் மதனகலை செப்புங் கிளிப்பேடு! 119

கன்னியர்க்குத் தன்நடையைக் கற்பித்த பேடையன்னந்
தன்னை நடைபயிற்றும் சாதி யனப்பேடு! 120

தேய்ந்துபோ யிக்கச் செறிந்தகுணம் போகாமல்
தோய்ந்துபோ யிச்சத் துலங்குகின்ற சாதிமுத்து! 121

ஒப்பமிட்ட செப்பில் ஒளித்துக் கிடவாமல்
செப்பமிட்ட செப்பிரண்டும் தாங்கிவருஞ் சிவரத்னம்!

நீறான காமன் நிமலனார் மீதில்வைத்த
மாறு மனவயிரம் மாற்றவரும் மாவயிரம்! 123

கண்ணுக்குட் கண்மணிபோல் கண்மணிக்குட்
பாவைவைப்போற்
பெண்ணுக்குப் பெண்ணாசை கொள்ளவந்த பெண்ணரசு!

## அவளுக்கு நற்சகுனமாதல்

அன்றுகுணமாலைஎனும் அன்பான பாங்கியைப்பார்த்(து)
'இன்றெனது கண்ணில் இடக்கண் துடிக்கு(து)' என்றாள்

'தோளின் இடப்பால் துடிக்குதென உரைத்த
வாளிநெடு வெட்டுப் படித்த வரிவிழியாய்! 126



கன்னி யறியாத காரிகையே இன்றுனக்குச்
சொல்லேன், அதிசுப சோபனமுண் டாகு(து)' என்றாள்.

## அவளை அலங்கரித்தல்

பாங்கியரை கேட்டு, மற்றைப் பாங்கிமார் தம்முடனே
பூங்குழலாள் காரிகையை பூவெடுக்க வேண்டுமென்று

பச்சைப் பரிமளங்கள் பாங்காய்க் கலந்தரைத்து
கொச்சிமஞ்சட் பூசிக் குளித்தழகு மேனியின்மேல் 129

சாந்து புழுகு சவாதுசுகம் பம்பூசிக்
காந்திதர வெள்ளைச் சலவைக் கண்டையிட்ட சேலைகட்டி 130

கார்குழல் வாரிநெறுக்கிட் டாரிகைக்குப் பாங்கியர்கள்
சீவி வகுப்பெடுத்துச் சேர்த்துக் குழல்முடித்து 131

மையெழுதிப் பொட்டெழுதி வட்டமிட்ட கொங்கைக்குத்
தொய்யில் எழுதித் துணையடிக்குப் பஞ்செழுதி 132

ஆடகப்பொன் மெட்டிட்(டு) அழகுவெள்ளித்
தண்டையிட்டுப்
பாடகங்க ளிட்டுப் பசும்பொற் சதங்கையிட்டு 133

முத்தார மேகலைமேல் மூன்றடுக்குப் பொன்னரைஞாண்
வைத்தாரக் கட்டி மருங்கொட்டி யாணையிட்டு 134

செல்வ கொடிப்பவளஞ் செம்மணிகள் சுன்றதுபோல்
கைவிரலுக் கேற்றரத்னக் கல்மோ திரங்களிட்டார்; 135

கட்டிப் பவளம் கனகவளை பொற்கடகம்
தட்டுச் சரியைச் சரியாகக் கைக்கணிந்து 136

பட்டு ரவிக்கையிட்டுப் பட்டையப்பொற் காறையிட்டு
வட்டமுலை மார்பிலங்க வச்ரச் சவடியிட்டார்; 137

மோகனப்பொன் மாலையிட்டு முத்துமணி மாலையிட்டுப்
பூகத்தை வச்ரமணிப் பூட்டணங்க ளாலழகுறத்தார். 138

காலுக்கொரு வட்ட மதிபொருமுத் நின்றதுபோல்
மூக்குத்தி முத்து முகத்துக் கிணங்கவிட்டார்; 139

கோத்தலப்பொன் ஜெமிக்கிட்டுக் கொப்பிட்டு வாளியிட்டு
செத்திருவீற் கேற்கத் திருகும் பிறையுமிட்டுக் 140

கொண்டை சுருட்டிமுத்துக் குச்சிட்டுக் குப்பியிட்டுத்
துண்டப்பி றைத்தெனங்கச் கட்டியொன்று கட்டிவிட்டார்

பூட்டினார்பொற்சிலைக் குப்பொன்னிடுவார்போ துடைமை
சூட்டினார் பூமாலை, சற்றினார் தோழியர்கள். 142

## பூங்கா அடைந்து பூவெடுத்தல்

ஞாலம் புகழும் நவரத்ன மாலைமின்னாள்
கோலஞ் சிறந்தமலர் கொய்யவென்று தான்நடந்தாள்.

வங்கார மாலை,முத்து மாலை, குணமாலை,
சிங்கார மாலை, திகழ்மோ கனமாலை 144

சம்போக வல்லி, சரசவல்லி, காமவல்லி
அம்போ ருகக்கண் ணமிர்தவல்லி, நீலவல்லி 145

மோகரத்னம், மாதுரத்னம், முத்து வசந்தரத்னம்,
நாகரத்னம் என்னுமந்த நல்லஉயிர்ப் பாங்கியருந் 146

தானுமாய் அந்தமலர்ச் சண்பகப்பூங் காவனத்தில்
மானினங்கள் சூழ வரும்பிடிபோல் வந்தணுகிக் 147

கொய்யுமலர் வண் டெழுந்துகோகனகப் பூவெனச்செங்
கைம்மலரைச் சுற்றக் கடுகிமலர்ப் பூவெடுத்தாள் 148

பூங்கொடிபோல் நின்றுலவிப் பொன்னனையாள்
பூவெடுத்தாள்
பாங்கிமா ரெல்லாம் பரந்தோடிப் பூவெடுத்தார் 149

வானையொத்த செங்கருங்கண் மானார் மதராசன்
பானையத்தைக் கொள்ளையிடும் பண்பாய் மலர்பறித்தார்

அங்குநின்ற பெண்களெல்லாம் அங்கங்கே போய்மறைய
இங்குநின்ற பேதை இனம்பிரிந்த மான்போல 151

மெல்லத் தனிநடந்து, வெட்சி இருவாட்சி
மல்லிகைசெவ் வந்தி மலர்ந்தபிச்சிப் பூவெடுத்து 152

தோட்டுப்பூ முல்லைமுதல் தாயகொடிப் பூவெடுத்துக்
கோட்டுப்பூ மீதில் அந்தக் கொம்பனையாள் மாலானாள்.



## கோட்டுப் பூ வேண்டல்

காவி இரண்டிருக்கக் கஞ்சமலர் அஞ்சிருக்கப்
பூவை விறங்குன்றுப் புன்முருக்கம் பூவிருக்க 154

கோங்கரும் பிரண்டிருக்கக் கோவைவிட்ட முல்லைமுகை
பூங்குமுதத் தள்ளிருக்கப் பூஞ்சண் பகமிருக்க 155

பூதலத்தி லேதாம் பொறிவைத் திரப்பவர்போல்
மாதரசி பூத்த மரந்தோறுஞ் சென்றுசென்று 156

சாதிதருஞ் சண்பகமே தாதுளப்பூத் தாதிமே
கோதிக் குழல்முடிக்கக் கோலமலர் தாரீரோ 157

மந்தாரை யே,செருந்தி, மாமரமே! நீரெனது
சந்தாபந் தீரத் தரிக்கமலர் தாரீரோ 158

பாதிரியே, காவித் பனிநீர்ப் பருமரமே
மாதவியே, நீரெனக்கு வண்ணமலர் தாரீரோ? 159

விண்ணூர்ந்த புன்னை விருட்சமே குங்குமமே
அண்ணாந்து நிற்குமெனக் காணமலர் தாரீரோ? 160

அம்பிட்ட கண்ணார் அகன்று விட்டார்; உங்களைநான்
கும்பிட்டேன், கோவிலங்காள்; கொய்துமலர் தாரீரோ

என்ற உரைகேட் டெழிற்குயிலும் பூங்கிளியும்
கன்றிமனம் நாணியந்தக் காவின் புறந்தொதுங்க 162

பூமரத்தின் நீழலிலோர் பூங்கொடிபோல் நின்றுலவித்
தாம நறுங்குழலி தாளெருத்தி யாகிநின்றாள். 163

## தலைவன் அவளைக் காணுதல்

ஏந்தும் இளமுலைப்பெண் ஏகாந்த மாயிருக்க
நாந்தகவீ ரன்பெரிய நாகம்க ளேந்திரதுரை 164

பன்றுதலை வென்ற பகைதிரக் காமனுருக்
கொண்டு வெலைவெல்லக் கரும்பு தேடுதல்போல் 165

வண்டுலவும் போது மலர்ந்தபெருஞ் சோலையைக்
கண்டுலவும் போதிக் கெதிர் கண்டான் விழிகுளிர; 166

நீரரமின் ஞளோ, நிசநாகக் கன்னிகையோ,
சூரரமின் ஞளோ, சுரலோக மேனகையோ? 167

கன்னிமையும் மன்னிவிட்ட காதும் மனந்நிலைகந்த
எண்ணம் அகற்றியதால் இவ்வுலகிற் பெண்ணரசே 168

என்றடுத்து மின்னாள் இருசெவிக்கும் இன்பமுறக்
குன்றடுத்த பூங்காவிற் கோமான் உரைக்கலுற்றான்: 169

### அவன் கூறுதல்.

ஊரே திருக்கும் உலகே(து) உமதுதிருப்
பேரேது வார்த்தையொன்று பேசினு லாகாதோ? 170

ஐவிரலிக் குள்ளே அமர்ந்த சிவனார்க்குத்
தெய்வ வடிவெடுத்த சேயிழையும் நீர்தாமோ? 171

பந்தெழுப்புங் கையால், பரன்னளித்த மன்மதனை
வந்தெழுப்பிக் கொண்ட மகராசி நீர்தாமோ? 172

பண்டுநள ரூபம் பலரெடுக்க வேதனளைக்
கண்டுமண மாலையிட்ட காரிகையும் நீர்தாமோ? 173

தெய்வரம்பை மின்னார் திருவழகெ லாந்திரட்டிக்
கைவருந்த வேதன்உமைக் கற்பித்து விட்டானோ? 174

என்பட்ட மென்றுவரும் இந்திரனார் பட்டமெலாம்
தன்பட்ட மாக்கும் சமர்த்தியார் நீர்தாமோ? 175

### அவளழகை வருணித்தல்

தெண்டிரையி லோடிமலை சென்றேறி வாய்வெருவிக்
கொண்டல் திரிவதுங்கள் கூந்தலுக்குத் தோற்றலவோ?
தேய்ந்தபிறை உங்கள் திருநுதலென் றால், அதிலே
ஆய்ந்தமணிச் சுட்டி அணிந்திருக்கக் காணேனே! 177

பூமன் வளைத்த புருவத்துக் குந்தரதி
காமன் வளைத்த கரும்புருவம் ஒப்பாமோ? 178

அவ்வேதங் கொண்ட அருங்கயல்போல் வேதன்இனி
எவ்வேதங் காணப் படைத்தான் இருவிழியை? 179

சன்னதவேள் கீர்த்திப்ர தாபம், புரிந்தகொலை,
வன்னமென மூன்றும் இருப்பதுங்கள் வான்விழியே 180



வல்லியைப்போ ருக்கொதுங்கேன், வாள்வேல்
படைக்கொதுங்கேன்?
மெல்லிதல்லீர் உங்கள் விழியம்புக் கச்சமுற்றேன் 181

தூக்குமுக் குத்திமுத்துத் தூக்காக் குமிழையுங்கள்
மூக்குக்குவமை சொன்னால் முத்தமிழோர்க் கொவ்வாதே

மாங்கனிக போலமென்றும் வள்ளைகா தொக்குமென்றும்
பாங்கில் உவமைகண்டேன் பல்வரிசைக் கென்சொல்வேன்

வித்துருமந் தன்னையுங்கள் மெல்லிதழ்என் றால்இதுவே
முத்தங் கிடைக்கும்அதில் முத்தங் கிடையாதே 184

ரூபமான மென்முலையீர் இந்தமுகத் துக்கோர்
உபமானஞ் சொல்ல ஒருபொருளுங் காணேனே 185

சங்கமுத்தும் உங்கள் தனிக்கழுத்தென் றால், உயிரால்
அங்கழுத்தும் ரேகை அதிற்பதிய மாட்டாதே 186

தோளுக்கு மூங்கிலிணை சொன்னால் பெருஞ்சோதி
நாளுக்கு மின்மினியை நாவலரும் சொல்வாரே 187

காந்தள்வனஞ் சென்றதுங்கள் கைபோலுந் தாமிருக்க
வாய்ந்ததவஞ் செய்து வரம்பெறுவோம் என்றலவோ?

தம்புருவை மீட்டியிசைத் தந்திதனில் ஏற்றரியாச்
செம்பவளம் உங்கள் சிறுவிரலுக் கொப்பாமோ? 189

வார்த்தைக்குத் தோற்ற வனக்கிளியின் மூக்குமுனை
சேர்த்தநகம் என்றுவமை செப்பினுல் ஒப்பாமோ 190

பாவின்இயல் கண்டுபல பாடித் தெரிந்துபெருங்
காவியத்தைப் பாடிக் கவிஞர்அரங் கேற்றுதல்போல் 191

முந்தச் செழுங்கமலத் துள்ளே முளைத்தெழுந்தோன்
தந்தச் சிமிழ்படைத்துத் தானவட்டந் தான்படைத்து

வம்பைச் சமைத்து வடிவுகண்டு மால்யானைக்
கொம்பைச் சமைத்துக் குணஞ்சற் றறிவறிந்து 193

தேங்காயைச் செய்து திரட்சிகண்டு பொற்குடத்தைப்
பாங்காகச் செய்து பணைப்பதிலே கண்டறிந்து 194

விந்தைதரு மேருமுதல் வெற்பெல்லாஞ் செய்தவன்கை
வந்ததற்பின் உங்கள் வனமுலையைச் செய்தானோ 195

காமன் இமை யாமல்வைத்த கண்கறுப்புப்பாய்ந்ததுவே
வாமமுலைக் கண்கள் மணிக்கறுப்பை என்சொல்வேன்

சூரியனும் சந்திரனும் தம்பிமுகத் தோனுமுங்கள்
பார முலையின் பகையடக்க வோபிறந்தார்? 197

ஆலோ வயிறுதனி ஆலிலைமேற் பள்ளிகொள்ளும்
மாலோ உரோமம் வகுப்பழகை என்சொல்வேன்? 198

வந்திச் சுழியை வலமாகச் சுற்றிலும்நீர்
உந்திச் சுழிகள்உங்கள் உந்திச் சுழியாமோ? 199

மெல்லிகல்லீர் உங்கள்இடை மின்கொடிபோல் உண்டெனவும்
இல்லையென வும்படைக்க இரண்டு பிரமனுண்டோ? 200

வாமமுதற் சாதி வடிவினுள் அல்குலுஞ்செந்
தாமரைப்பூப் போலிருக்கும், சந்தேகம் வேறுமுண்டோ?

வாழைக் குறங்கல்குல் மண்டபமாம் மன்மதனுக்(கு)
ஏழைக் கிரங்குமிடம் என்றென் றறியேனே 202

செவ்வரால் கவ்விநின்ற சீர்அவவ னெழுந்தான்,
அவ்வரா லைச்சுமந்த ஆமையோ பொன்னடிதான்? 203

அஞ்சு தலையரவோ, அஞ்சுவிர லும்படமோ,
மஞ்சுவரக் கண்ட மடமயிலோ உம்சாயல்? 204

பின்னழகைக் காணில்ரதிப் பெண்ணைமதன் நாடுவனே
முன்னழகைக் காணில் முனிவர்தவஞ் செய்வாரோ? 205

## அவளை வேண்டல்

சேடியரும் இல்லாமல், தேன்மொழியீர் இவ்வனத்தில்
நாடிவரப் பெற்றதும்முன் நான்செய்த மாதவமோ!

ஏதும்ஒரு வார்த்தை இயம்புகிலீர் உங்களுரை
வேதமோ, கல்லாவின் மேவுசிவ மந்திரமோ? 207

மேரு கிரியும்அந்த வெள்ளிமலை யும்பார்க்க
நீர்உத் தரிசும் நெகிழவிட மாட்டீரோ? 208

கைபனைவைத் துங்கள் கழுத்தின்மணம் மோக்துகொண்டால்
ஐயமறச் சங்குமுகம் ஆடும் பலனலவோ? 209



புனைந்ததுகில் சற்றே புறம்போகச் செய்துவிட்டால்
அனந்தசய னத்தலத்தை யானறிந்து கொள்ளேனோ? 210

தாகமற ரூத்தமொன்று தந்தால் உமதுசக்ர
வாக முலைக்குமுத்த மாலையாச் சூட்டேனோ? 211

என்மார் பிலங்குதக ரேகையைவைத் தால்உமது
பொன்மார் பிலங்காத்ன பூடணமாய்ப் பூட்டேனோ? 212

பாதி யுடலிற் பரமனொரு பெண்ணைவைத்தான்
மாதொருத்தி தன்னை மணிவண்ணன் மார்பில்வைத்தான்

செங்கமல வேதனொரு தேமொழியை நாவில்வைத்தான்
உங்களைநான் என்மனதுக் குள்ளிருத்திக் கொள்ளேனோ

வாமத் தரவுமலை மந்தரமுந் தந்தால்நான்
காமக் கடலைக் கடைந்தமிர்தங் காட்டேனோ? 215

பட்டாடைக் காமன் குளத்தைஎன் றன் பாரிசமா
விட்டால்முப் போக விளைவேற்றிக் கொள்ளேனோ? 216

வாழையடி முக்காணி வட்டம் எனக்களித்தால்
ஏழை உழுதுபயி ரேற்றிப் பிழையேனோ? 217

வற்றாச் சமுத்திரமாம் மாரன் அரண்மனைக்குள்
அல்தாந் திரமெழுதி ஆண்மை செலுத்தேனோ? 218

ஆலடிச் செய்யோ டரசடிவட் டம்விட்டால்முச்
சாலடித்து நல்லவெள்ளைச் சம்பா விதையேனோ? 219

தாண்டு மிருகத் தனிவேட்டை வந்தஎனை
மீண்டுமொரு காம வேட்டைவிளை யாடவிட்டால் 220

கொங்கைமலை பற்றிக் குரலெழுப்பி யேறிநடுப்
பொங்கு கலைகுலையப் புல்லுமரை யுள்ளாக்கிச் 221

சாய்ந்தவிழி மாவிரண்டும் சண்பகக்காட் டிற்குதித்துப்
பாய்ந்துகுமி ழோடொதுங்கி நின்று பரதவிக்க 222

மோக வலைக்கு முயல்சிக்கு மின்பமுற
ஆகமலைப் பின்றி அடுத்தொருகை பாரேனோ? 223

மன்னிப்பா யென்னை வரவழைத்து நீருமது
கன்னிப்போ ராகக் கல்விப்போர்க் கென்னைவிட்டால் 224

காமத்தேர் ஏறிநன்றுக் கட்டியிறு கக்கலந்து
நாமவேல் பாயச் சமரின் முனைகாட்டி 225

முன்னணியும் பின்னணியும் மொய்த்த குழல்வகுப்பும்
பின்னிடநன் னூலிடைப்ர தாபக் கொடியாட 226

தண்டை யொலிமேளம் தாளம் நெகிழ்ந்தருமும்
வண்டு புறங்கொடுத்து மாற்றலர்கள் போற்பறக்க 227

வெம்பிளவைப் பாய்ந்தடர விட்டதன பாரமென்னும்
கம்பமத யானைதனைக் கைப்பிடியா கப்பிடித்து 228

சங்கம் முழங்கச் சரிபோகப் போர்முடித்துச்
செங்கைக் கருப்புச் சிலைமதனை வெல்வேனோ? 229

மேலுலகந் தன்னைவிட்டு மேதினியில் வந்தரம்பை
போலும்உங்கள் பவ்வனமாம் பொய்கைதனில் என்னைவிட்டால்

ஆடைஒரு பக்கம் அணையிற் கிடக்கஇதம்
மூடும் இரண்டு முளரிகள்என் மார்பழுந்த 231

ஓர்தா மரைப்பூ உவந்தென் முகத்தணைய
ஓர்தா மரைப்பூ உலாவிமுது கைத்தடவ 232

பின்னொருசெந் தாமரைப்பூ பின்பிடரி யூடுவரக
கன்னிவராற் சோடு கலந்திடுப்பி னூடொதுங்க 233

என்மீது தாவி இருகெண்டை போராட
மென்மா மலர்க்குமுதம் மெல்லமெல்லத் தேனூற 234

சைவலமோர் பாற்குலையச் சங்கொலிப்ப வீழ்ந்தெனது
மெய்குளிரத் தோய்ந்து விரகவிடாய் தீரேனோ? 235

தங்கவினை யாட்டுத் தனிப்பீட மீதுசது
ரங்கவினை யாட்டுக் களைத்திரே யாமாகில் 236

கால்பலன்கொண் டேற்றியிரு காரானை முட்டவிட்டு
நாலு முகத்து நடத்துபரி சுற்றவிட்டு 237

எட்டெட் டினுக்கும் இணங்கச் சகடேற்றித்
தொட்டதொட்ட வாட்டமெலாந் தோலாமல் வெல்வேனோ? 238

காதோடு வாதாடுங் கண்மடவீர் ஒன்றியிலே
சூதாட என்னைவரச் சொல்லியழைத் தீராகில் 239

குங்குமக்காய்ச் சோடிரண்டும் கூட்டிக் கலந்தாடி
அங்கம் பசலைக்கா யத்தனையும் போகவிட்டு 240



வித்தை தருஞ்சிவப்பை மெல்ல வரநிறுத்தி
அந்தக் கறுப்பையெல்லாம் பின்னே அலையவிட்டு 241

ஒருக்கால் இருக்காலோ டொப்பாறு மாறும்
பெருக்காக வக்கம் பிசகாம லேயாடி 242

கண்பார்த்து நீங்கள்வெட்டிக் கட்டுத் தொடர்ந்தெறிப்
பண்பாக வீட்டிற் படுத்துவினை யாடேனோ? 243

நற்காம பூசை நடத்திடவே நீங்கள்சொன்னால்,
விற்காம தெய்வ விரதந் தனியிருந்து 244

மோக சமுத்திரத்தின் மூழ்கிமதன் மந்திரமும்
ஆகவரு வேற்றி அந்தக் கரணமுடன் 245

கன்னலொடு தேமாங் கனியருந்திச் செவ்விளநீர்
தன்னைப் பருகித்திரைச் சந்துருவைத் தானகற்றி 246

சாமஞ்சா மந்தோறும் சங்கநா தத்துடனே
தேமமொடு பூசை நிறைவேற்றிக் கொள்ளேனோ 247

**கந்தருவ மணத்துக்கு இசையும்படி வேண்டல்**

இந்நேரம் என்சொற் கிரங்குவீர் எப்படியும்,
பின்னே உமைக்கலந்து மேவாமற் போவேனோ? 248

ஓடிவலை கட்டி ஒதுக்காம லேளிதில்
நாடிய பொன்மானை நான்விட் டகல்வேனோ? 249

தாப்பான காடுந் தடவரையுஞ் சுற்றுமல்
வாய்ப்பாக வந்த மயிலைவிட்டுப் போவேனோ? 250

வீண்டுநறுந் தேன்சொரிய மென்கமலப் பூக்கண்ட
வண்டுபடிந் துண்டு மகிழாமற் போவதுண்டோ? 251

காந்தர்வ நியாயமெனக் கண்டவுட னேஇணங்கித்
தோய்ந்திடுகல் யாணமே சோபனகல் யாணமன்றோ?252

காணும் வள்ளிதனைக் கந்தனுர் கூடியதும்,
மாணுன் சுபத்திரையை வாள்விசயன் கூடியதும், 253

தாங்களே சம்மதித்தோ தந்தைதாய் சம்மதித்தோ?
மாங்குயிலே என்னை மருவுவதே காரியங்காண். 254

முலைக்கோட்டை யுள்ளமுத்து மோகவமே என்னை
நிலக்கோட்டை வேந்தனென்று நீர்தாம் அறியீரோ? 255

தானும் நவபுரியான், நாரியர்சி காமணித்
தானும் நவரத்ன மாலையெனக் குழல் தாழ்வாமோ? 256

என்றுபெருஞ் சூல்கொண் டிரங்கும் மழைக்கெதிரே
சென்று வருணை செபஞ்செய் வதுபோல 257

தன்னிடத்தில்வைத்தமயல் தாங்காதாட் டுச்சைசொல்லி
அன்னவளைச் செங்கை தொடலுமயிர்க் கூச்செறிந்தான்.

### கந்தருவ மணம்

பேசுலெனும் பெஞ்சைப் பெரியநா கேந்த்ரதுரை
நாகரிக மோக நவரத்ன மாலையுடன் 259

கொங்கலரும் முல்லைக் கொடியும்நறு மல்லிகையும்
பைங்கொடியு மாகப் படர்ந்தமணி மண்டபத்தில் 260

பூத்துச் சொரிந்தமலர்ப் பூம்பாய லின்மீது
வாய்த்த ரதியும்அந்த மன்மதனும் போலிருந்து 261

சிவு பிளவருந்திச் செங்கைச் சுருள்பகிர்ந்து
கோவையிதழ் முத்தமிட்டுக் கொய்யுமலர்ப் பூமுடித்து

சட்டி யணைத்துக் கனிவா யிதழ்பருகி
வட்ட முலைபிடித்து வண்ணத்துகில் நெகிழ்த்தி 263

ஆலிங் கனவிதங்கள் ஐந்தும் புரிந்தரவம்
போலும் கடித்டமாம் பூவைக் கனிவாக்கிப் 264

பொற்கொம்பும் பூங்கொடியும் பூண்டுதுவண் டாடுதல்போல்
கற்கும்நவ சித்ர கரணவகை பாராட்டி 265

குங்குமக தம்பமிடு கொங்கையில்ந கம்பதிய
மங்குலின்இ ருண்டகுழல் மஞ்சரிகள் பிஞ்சரிய 266

வைக்குமுக பத்மமுக வட்டமதி யிற்பதிய
நெக்குருகி நெக்குருகி நெற்றிகளின் முத்துதிர 267

பாகனைய வாய்மொழிகள் பாதிதடு மாறஒரு
பூகமிசை காடைகள்பு றவொலிகள் குகுகுவென 268

வரிவிழிகள் கடைபுரள மதுரவிதழ் வெளிறவிரு
பரிபுரமும் வளையும்இடை பதறும்இடை பதறும்என 269

ஆவியொன்று கூடிரண்டுள் ஆசையொன்று நேசமொன்று
மேவுசம்ப்ர தாயமொன்று வேளையிந்த்ர போகம்வந்து



அந்தஅனு போகபர மானந்த சம்போகம்
தந்தசுக போகஞ் சரிபோக மாய்ப்பெருக 271

சோபவிடாய் தீர்ந்துச் சுவைநீர் அளைந்துபிர
தாபவிடா யாறி இருக்குந் தருணத்தில்— 272

### தலைவனைப் பரிவாரங்கள் தேடி வருதல்

நல்லியபடி பற்றி நடந்தநிக ளங்கமல்லன்
செல்லியபடி பற்றிச் சேனு தளந்தொடர்ந்து 273

தென்னன் அடிபரவத் தேடிவரும் ஏழ்கடல்போல்
மன்னன் இருக்கும் மலர்க்காவில் வந்தணுகிக் 274

கன்னூரக் காணுமுன்னம் காதாரச் சொற்கேட்டு
தன்னூர் புகழ்பெரிய நாகமகே னேந்த்ரதுரை 275

மின்னை நிறுத்திவரும் மேகம்போல் மேகமின்னுள்
தன்னை நிறுத்திவந்து தானெக் கெதிரானான் 276

காவிலிருந் தையன்வரக் கண்டோர் முகங்களெல்லாம்
பானு வரக்கண்ட பங்கயம்போ லாயினவே 277

### தலைவன் தன்னூர் மீளல்

கொண்டல் படிக்கும் கொடைப்பெரிய நாகேந்த்ரன்
தண்டிகையி லேறியந்தச் சண்பகப்பூங் காஅகன்றான்

மந்த்ரிதள கர்த்தர்வர மாசேனை முன்நடக்கத்
தந்த்ரதுரை மக்களுடன் சந்தையூர்க் கேமுகமாய் 279

வந்து நவபுரியில் வாழும் அகோபிலமால்
செந்திருவின் பாதமலர் சேவித்துத் தெண்டனிட்டு 280

தீர்த்தமுடன் மாலை திருவடிபெற் றுள்மகிழ்ந்து
வார்த்தைதவ றுதகண்டன் மால்யானை மீதேறி— 281

### நகரப் பிரவேசம்

தாரை நவுரி தவண்டைதுடி நாதசுரம்
பேரிகைஎக் காளம் பெரியமே ளந்தொனிக்க 282

கஞ்சுகியர் கைப்பிரம்பர் கட்டியர்முன் கைநீட்டி
'பெஞ்சைநகர் வேந்தா, ப்ரதாபநிக ளங்கமல்லா 283

துங்கா, சுவாமி, துரைராச சண்ட,சப
ரங்கா, ரணவீம ராயா, ரவுத்ரமிண்டா 284

தீர,சுத்த வீரகப்ர தீபகர்த்த நாவலர்க்(கு)உ
தார,சத்ரு சேதநற்ப்ர தாப,வச்ர தேகஉக்ரா 285

மகதரங்கர் கவுடர்வங்கர் வடகலிங்கர் குடகர்கொங்கர்
குருதர்வந்து பணியுமிந்த்ர கொலுவிருந்த புவனசந்த்ரா

'சாமீ பராக்குப் பராக்கெச் சரிக்கை' எனச்
சோமோ தயம்போல் துலங்கு குடைநிழற்றப் 287

பக்கக் கவரிரெட்டைப் பாவாடை வீசிவர
மைக்கட் குமரியர்கள் ஆலத்தி வந்தேந்த. 288

மாலே சரிய வருவார் சிலமடவார்
சேலே சரிய வருவார் சிலமடவார் 289

தன்னுலவும் பைந்தார் தருவான் எனஓடி
வண்ணவளை தோற்று வருவார் சிலமடவார் 290

தேடுபுகழ் வேந்தனுடன் செல்லுமன தைப்பிடிக்க
ஓடுதல்போ லோடியடி ஒய்வார் சிலமடவார் 291

வல்லியனை யாள்பதித்த வாய்வடுவைக் கண்டுதங்கள்
மெல்லிதழிற் பற்பதித்து மீள்வார் சிலமடவார் 292

ஒருமானைப் பற்றிவிரைத் தோடியவாள் வேந்தன்
வருமான் அனேகம்எதிர் வந்துநிற்கப் பாராமல் 293

வாழி சருவசித்தி வாரணத்திற் றுனிறங்கி
ஆழி யனையான்பொன் னரண்மனைக்குள் வந்திருந்தான்,

## தலைவனை அவள் தேடுதல்

இங்கே துரைப்பெரிய நாகேந்த்ரன் வீற்றிருக்க
அங்கே மலர்க்காவில் அன்னநடைப் பெண்பெருமாள்

பேராளன் பெஞ்சைப் பெரியநா கேந்த்ரதுரை
வாராமை கண்டு மதிமறந்து மெய்சோர்ந்தாள் 296

ஆனைதனைக் காணு தரும்பிடிபோய்ப் பார்ப்பதுபோல்
மானனையாள் அந்தமலர் மண்டபமும் நீர்ச்சுனையும் 297

தேடினள், மூச்செறிந்தாள். செங்கமலத் தாள்சிவப்ப
ஓடினள், எங்கோன் உருவெளியைத் தெண்டனிட்டாள்



என்னிடத்திற் கோபம்வ(று) என்றும், எழுந்திருந்தாள்
கன்னமின்னேத் தங்கோருவன் வந்தெதிரக் கண்டயர்த்தாள்; 299

காருருவக் காமனெய்த கைப்பாணம் தைத்துமுலை
ஆறுருவ வைவேல் உருவியமான் போனுமன்றுள்; 300

காவா யுதக்கொடியோன் கையா யுதவிழியாள்;
மாவா யுதமீன்ற மாமணியைத் தானுநிர்த்தாள்; 301

## அவள் ஆற்றுதல்

பொற்பகலா மாதவியே, புன்னையே சண்பகமே
கற்பகமே என்னுசைக் கற்பகத்தைக் காணீரோ? 302

காவரசே, ஆயிரச்செங் கண்ணரக போலிருக்கும்
பூவரசே பெஞ்சைப் புவியரசைக் காணீரோ? 303

முன்மான் பிணைநடக்க மோகமாய்ப் பின்தொடரும்
பொன்மானே என்னுசைப் பூமானைக் காணீரோ? 304

தோய்ந்த ரவியைத் தொடர்ந்த முகசூர்ய
காந்தமே என்னுசைக் காந்தன்வரக் காணீரோ? 305

என்னிடத்தில் மாயாவி !இச்சைசொலிச் சேர்ந்ததுரை
பின்னைக்கோர் அந்தரங்கம் பேசாமற் போவாரோ?

காமிடத்தில் நானுலவக் கண்டுதனி யாகவந்து
வானவர்கோன் என்னை மனமுருகிச் சேர்ந்தாரோ? 307

தந்திரிகொள் வீணை நலமொளிந்து வந்துதெய்வக்
கந்திருவன் என்னைக் கருத்துருகிச் சேர்ந்தாரோ? 308

இந்திரனோ யாருக்கும் சரைந்துா றென்பதுண்டே
சுந்திருவ னேயானுங் கன்னிமைக்கக் காரியமேன் 309

பெய்யும் கொடையான் பெரியநா கேந்த்ரதுரை
ஐயன் அணைந்ததல்லால் ஐயமினி வேறுமுண்டோ? 310

மன்மதனை வென்று வயங்குந் திருவழகை
என்மனதுக் குள்ளே எழுதவோ வந்தகன்றுன்? 311

கூடியின்பங் கண்ட குதலைமொழிப் பேதைநம்மை
தேடிமுகம் வாடித் தியங்குவள்என் றெண்ணுனோ? 312

இந்தக் கவடுசெய்வான் என்றறிந்தாற் கைகலக்கு
முந்தக் குடிலமிட்டு மூன்றுமே கொள்வேனே? 313

தன்னெஞ்சம் போலத் தழுவிப் பிரிந்திருக்க
வன்னெஞ்சி என்றே மறக்கத் துணிந்தாளே! 314

பேரூர் வழியேநாம் பின்தொடர்வோம் என்றாலும்
ஒருரேன் முனிவே ஒன்பதார் என்றானே 315

என்றிரங்கும் வேளை இருஞ்சே வலைப்பிரிந்த
அன்றிலெனத் தானே சிறியாள் அறிவயர்ந்தாள் 316

## பாங்கியர் காணுதல்

இவ்விடத்தில் மெய்சோர்ந் திவன்கிடக்க வெவ்வேறாய்
அவ்விடத்திற் பூவெடுத்த ஆயிழையார் எல்லோரும் 317

குன்றிரண்டு தாங்கும் கொடிபோல் இடைதுவள
நின்று மலர்பறித்த நேரிழையைக் காணாமல் 318

மற்றோர் வனமோதாம் வந்த(து) எனத்திகைத்துச்
சிற்றடியைக் கண்டார், திரண்டார் ஒருமுகமாய் 319

சென்றார்நெடுந்தூரம் 'தேன்மொழியே தேன்மொழியே'
என்றார் மதிமறந்த ஏந்திழையை வந்துகண்டார் 320

## அவளை அழைத்துச் செல்லுதல்

கையணையிற் சாய்ந்து கலைகுலையக் கண்முகிழ்ப்பத்
தையல் கிடப்பத் தரியாமற் பாங்கியர்கள் 321

'தூக்கமோ வெம்பசியோ தோழியரைக் காணாத
ஏக்கமோ மன்மதன்கண் ணேறுபட்ட காரணமோ? 322

தெய்வக் குறையோ,நாஞ் செய்வதென்? என்றேதிகைத்துக்
கையாற் கலைதிருத்திக் கட்டி எடுத்தணைத்தார் 323

மாந்தளிரால் வீசி, மதிமுகத்தின் வேர்துடைக்க
ஏந்திழையாள் மூர்ச்சைதெளிந்தேங்கினள்போலிருந்தாள்

ஒண்டொடியார், மங்கை உடலிற் குறியிடங்கள்
கண்(டு) இதுஏ(து)? என்றார்கள், கன்னிக்கும் வாயுண்டோ?



கைநடுங்கிக் கால்நடுங்கிக் கன்னியர்க ளெல்லோரும்
மெய்நடுங்கித் தாமே விசாரமிட்டுக் கொண்டுநின்றார்.

வல்லியைய கொங்கை மடமானைக் கைலாகின்
மெல்லமெல்லத் தாம்நடத்தி வீட்டிற் கொடுபோனார்

பாகார் மொழியாளைப் பஞ்சணையிற் சேர்த்திடலும்
மோக அனல்மீற முத்தம் பொரிந்ததுவே 328

முன்கை அணிவளைகள் மூச்செறியக் காய்ந்துருகி
மென்குவளைக் கண்ணீரின் வெள்ளத்தால் ஆறியதே 329

வீசியவேள் அம்பு மெழுகுபா வைக்குள்உருக்
கூசிகள்போற் பாய உருக்கூசி உள்ளயர்ந்தாள். 330

## அவளுக்கு உபசாரஞ் செய்தல்

கண்டு சகியார் கருத்திற் சகியாராய்
ஒண்டொடிக்குச் சீத உபசாரஞ் செய்யலுற்றார் 331

செய்தஉப சாரமெல்லாம் தேனுள் பொருளாகி
வைதுமட வாரை மனங்கொதித்துச் சொல்லலுற்றாள்

## அவள் கூறுதல்

வேடையெலாந் தீரஎன்மேல் வீசுவார் போலவெயிற்
கோடையெலாம் என்மீதிற் கொண்டுவந்து விட்டீரே

சாளரத்தை நீக்கித் தனிப்புலியைப் பாயவிட்டு
நீளுமலைத் தென்றலென்றீர். நிட்டூரஞ் செய்தீரே 334

காமரச மெல்லாங் கனகமஞ்ச மேற்பரப்பிப்
பூமலர்என் றீர்,மடவீர் பொய்யும் படித்தீரே 335

சேலென்ற கேதனத்தோன் தேமாலை யைப்பிழிந்து 336
பாலென்று தந்தீர், பழிகாரர் ஆனீரே

மங்கைநல்லீர் என்றன் வனமுலைக்கு நீர்அணிந்த 337
குங்குமமுஞ் சாந்தும் குளிர்ந்த பனிநீரும்

தேடும் பரத்தையர்பாற் காதலனைச் செல்லவிட்டு
வாடும் மனையாள் மனம்போற் கொதிக்கு(து) என்றாள்

## தாய் பாங்கியரை வினவுதல்

என்னைப் புலம்பி இவள்படும்பா டத்தனையும்
அன்னைக்குச் சொன்னார்; அவள்பதறி ஓடிவந்தாள் 339

பெற்றெடுத்த தன்மகளைப் பேய்க்கிழவி யாருகும்
குற்றமற நோக்கிக் குறிப்புறவே கண்டுகொண்டாள் 340

செவ்வாய் இதழ்க்குறியும் செப்புமுலை மேற்பதித்த
கைவாள் உகிர்க்குறியும் கண்மை அழிந்ததுவும் 341

பார்த்தாள்; உடன்போன பாங்கிமாரைச் சண்டையிட்டாள்
வேர்த்தாள் மகளை வெருண்டாள் விசாரமிட்டாள் 342

நீங்களறி யாமலித்த நேரிழையைப் பூங்காவில்
ஆங்கொருவன் கூடி அணைந்தவகை சொல்லுமென்றுள்.

### பாங்கி கூறுதல்

போனதும் வெவ்வேறுப்ப் பூவெடுக்கும் மங்கைதனி
யானதுவும் கண்டதுவும் ஆயிழையார் தாமுரைத்தார்

சந்தமுலை யார்உரைக்கத் தையல்குண மாலைசொல்வாள்
அந்த வனத்தில் அசகையுற்ற வேளையிலே 345

சுற்றியடி பார்த்தேன் துரைகளடி போல்அதிலே
உற்றசங்க ரேகை யுடன்பதும ரேகைகண்டேன். 346

அச்சவடு கண்ட அசகையவள் வாற்புவனம்
மெச்ச நிலக்கோட்டை வேள்பெரிய நாகேந்த்ரன் 347

வேட்டைக்கு வந்தானும் மேளத் தொனியுமந்தக்
காட்டில் வெடித்தொனியும் காதாரக்கேட்ட(து)என்றுள்

### கேட்டுத் தாய் மகிழ்தல்

அப்படியோ? சொல்லென் அமிர்தகுண மாலைமின்னே
செப்படிவித் தைத்தொழிலிற் சித்திரத்தைக் கண்டாளே 349

வண்டார் குழலாய் மதன்பெரிய நாகேந்த்ரன்
கண்டால்நான் ஈன்ற கரும்பைவிட்டுப் போவானோ 350

அந்தத் துரையழகைக் கண்டாலும் நான்ஈன்ற
பைந்தொடியுந் தானொருகை பாராமல் மீள்வாளோ?

எம்மையறி யாமல்இவள் எப்படித்தான் கைகலந்தாள்
நம்மையறி யாமல்அந்த நாயகன்எவ் வாறணைந்தான்

கன்னம் ஒருவரிட்டாற் காவலனோ டேயுரைப்போம்
மன்னவனே இந்த வழமை செய்தால் ஆர்க்குரைப்போம்

பாகார் மொழியாளைப் பன்றிமலைச் சாரலுக்குப்
போகாதே என்றுசொன்னேன் புத்தியைக் கேட்டாளோ?



பேய்வார்த்தை யாருலும் பெற்றபிள்ளை கேட்பதுண்டு
தாய்வார்த்தை கேளாத் தங்கச்சி மூப்பாச்சே 355

தெண்டிக்கும் மன்னவனைச் சேர்ந்தவனுக் காரியைநான்
கண்டிக்கப் போகாதே கள்ளியெனக் கூடாதே 356

மானபரன் பெஞ்சை மகராச னைமருவப்
போனவளோ யன்றி,இவள் பூவெடுக்கப் போனவளோ?

வித்தைதரும் ஒன்பதூர் வேந்தனுக்கு மோகினிமா
மந்திரமுண் டென்றென் மதலை யறியாளோ? 358

தூயபுகழ் பெஞ்சைத் துரைக்குநமைப் போல்மடவார்
ஆயிரம்பேர் உண்டென்று அரங்கி அறியாளோ? 359

பூங்கொடிசூழ் தண்டலையிற் பூவெடுக்கப் போனஉயிர்ப்
பாங்கிமார் தாமிருக்கப் பாவைதனைச் சேர்வானேன்?

அந்நாளில் வேதன் அமைத்தபடி யேயொழிய
மின்னுரை நோவதுவும் வீணே பிதற்றுவதும்; 361

நம்மையறி யாமல் நடந்ததல்லால், யாவர்க்கும்
சம்மதிக்கும் காரியமே தையல் நடத்திவந்தாள், 362

மன்ன னழகுக்கென் மகளே மனையாளாம்;
கன்னியழ குக்கும்அந்தக் காவலனே காதலனும் 363

மாவடுக்கண் மங்கையென்ன மாதவம்முன் செய்தாளோ?
பூவெடுக்கப் போனுள் புதைய லெடுத்துவந்தாள் 364

பையப் பழம்நழுவிப் பாலில் விழுந்ததுநான்
செய்ததவ மோ,மகள்முன் செய்தபூ சாபலமோ 365

என்று மகளை இருகையால் தான்தழுவி
ஒன்றுக்கும் அஞ்சாதே யோகமுமுன் பங்காச்சே 366

### வாழ்த்துதல்

இந்தமக ளேந்த்ரனருள் செய்பெரிய நாயகனைச்
சொந்தமாய்க் கூடிச் சுகித்துமிக வாழ்ந்திரென்றுள் 367

காவுலவு மின்னே கனகபல்லக் கேறிஇந்தப்
பூவுலகு கொண்டாடப் புத்திரனைப் பெற்றி ரென்றுள்

## தலைவனில்லத்துக்கு அனுப்புதல்

என்றுமந்த வேளை, சில ஏந்திழையார் சூழ்ந்துவர
வன்னமணிப் பொற்சிவிகை வாயில்வரக் கண்டாளே

கண்டாள், மகளைக் கனகபல்லக் கேற்றிஇன்பங்
கொண்டாள் குணமாலை கூடச் செலவிடுத்தாள் 370

சொற்படியே அந்தத் துரைபெரிய நாயகனும்
கற்பகத்தைக் கூடிஅவன் காதல்கொண்ட காதலியாய்ப்

பூதலத்தோர் வாழ்த்தநல்ல புத்திரரைப் பெற்றெடுத்து
மாது நவரத்ன மாலைமகிழ் வுற்றிருந்தாள் 372

## வாழ்த்து

சீர்வாழி லோகம் செழித்துமிக வாழிஇன்ப
தார்வாழி வெள்ளை புயய கொடிவாழி 373

பெஞ்சைநகர் வாழி பெரியநா கேந்த்ர துரை
கஞ்சமலர் மாது கருணைபெற்று வாழியவே! 374

......

Tamil Heritage Foundation
தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials
e-Book series
an international NGO initiative to digitize old Tamil books
and palm leaf manuscripts
visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை
தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை